வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 05
23.10.2024 புதன்கிழமை
இதழ் : 296
பக்கங்கள் : 12




லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கு

# யாழ்ப்பாணம் தவிர்ந்த எந்த நீதிமன்றிலும் முற்பட தயார்!

## நீதிமன்றுக்கு தெரிவித்தார் கோட்டாபய

கொழும்பு, ஒக்ரோபர் 23

**லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் தவிர்ந்த எந்தவொரு நீதிமன்றிலும் சாட்சியமளிக்க தான் தயாராக இருக்கிறார் என்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



தனது இந்த நிலைப்பாட்டை சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா மூலமாக நேற்று செவ்வாய்க் கிழமை உயர்நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தியுள்ளார் முன்னாள் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ.

மனித உரிமைகள் செயல்பாட்டாளர்களான லலித்குமார் வீரராஜ், குகன் முருகானந்தன் ஆகியோர் கடந்த 2011 டிசெம்பர் 9ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்டனர். இவர்களை அரச புலனாய்வு பிரிவினரும் இராணுவத்தினருமே கடத்திச் சென்றிருந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டி ருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் லலித், குகனின் உறவினர்கள் ஆள் கொணர்வு மனு ஒன்றை கடந்த 2012ஆம் ஆண்டு கொழும்பு

11

## கனடாவில் துப்பாக்கிச்சூட்டில் யாழ்ப்பாண குடும்பஸ்தர் பலி!

மொன்றியல், ஒக். 23

கனடாவில் பணிபுரிந்து வந்த இலங்கையர் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், மயிலிட்டி பகுதியைச் சேர்ந்தவரே நேற்று முன் தினம் கனடாவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பஞ்சலிங்கம் பார்த்திபன் என்ற 44 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்தார்.

அவர் வசித்த வீட்டுக்கு அருகாமையில்

11

## அரிசி நிர்ணய விலையில் எந்த மாற்றமும் கிடையாது

### வியாபாரிகளிடம் ஜனாதிபதி

கொழும்பு, ஒக். 23

அரிசியின் நிர்ணய விலையில் எவ்வித மாற்றத்தையும் மேற்கொள்ள எதிர்பார்க்கவில்லை என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஒழுங்கமைக்கப்பட்ட விவசாயத் திட்டத்தை உருவாக்கி விவசாயிகளுக்கு அதிக நன்மைகளைப் பெறுவதற்கான நீண்டகால வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும்

11

## கம்மன்பிலவின் ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையை நிராகரித்தது அரசு!

### ரவி, ஷானி பதவியில் தொடர்வார்கள் அமைச்சரவை பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 23

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைக் குழுவின் அறிக்கை உத்தியோகபூர்வமற்றது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ரவி செனவிரத்ன மற்றும் ஷானி அபேசேகர ஆகியோரை தற்போதைய பதவிகளில் இருந்து எக்காரணம் கொண்டும் நீக்க அரசாங்கம் தயாராக இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறெனினும், உயிர்த்த

11

## மாகாண சபைகள் பொறிமுறையை நெறிப்படுத்த பரிந்துரை தயாரிக்குக!

### மாகாண ஆளுநர்களுக்கு ஜனாதிபதி பணிப்பு



கொழும்பு, ஒக். 23

மாகாண சபை பொறிமுறையை நெறிப்படுத்துவதற்கான பரிந்துரையொன்றைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு மாகாண ஆளுநர்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

மாகாண சபைகளின் கீழ் உள்ள சுகாதாரம் மற்றும் கல்வித்

11

## ரஷ்ய படையில் சேர்ந்தவர்களை மீட்பது கடினம்!

கொழும்பு, ஒக். 23

வெளிநாட்டலுவல்கள் அமைச்சு என்ற ரீதியில் ரஷ்ய இராணுவத்தில் இணைந்த இலங்கையர்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி வருகின்றோம். அவர்கள் உத்தியோகபூர்வமற்ற இராணுவத்தில் சட்ட ரீதியற்ற முறையில் இணைந்தமையால்

11

அடிப்படை உரிமை மீறல்:

## இரு வழக்குகளில் ரணில் பிரதிவாதி!

கொழும்பு, ஒக். 23

அடிப்படை உரிமைகள் மீறல் வழக்குகள் இரண்டில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பிரதிவாதியாக குறிப்பிடுவதற்கு உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

2022இல் சோசலிச மாணவர்

11

## சிறந்த எதிர்காலத்தை கட்டியெழுப்ப இலங்கைக்கு ஆதரவு வழங்கப்படும்!

### மீண்டும் அறிவித்தது சர்வதேச நாணய நிதியம்

கொழும்பு, ஒக். 23

சிறந்த எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு இலங்கைக்கு ஆதரவளிக்க அர்ப்பணிப்புடன் இருப்பதாக சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த மாநாட்டில் பங்குபற்றும் இலங்கையின் பிரதிநிதிகளுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவுக்கும் இடையிலான சந்திப்பொன்று வாஷிங்டனில்

11

## தமிழ் மக்களின் உரிமைகளை எம்மால் வென்றெடுக்க முடியும்

### சித்தார்த்தன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக். 23

வரும் தேர்தலில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு பலமான கட்சியாக மக்கள் ஆணை கிடைத்தால் தமிழரின் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க முடியும் - இவ்வாறு கூறியுள்ளார் அந்தக் கூட்டணியின் பங்காளி கட்சித் தலைவரான

11

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ரணிலின் அறிக்கை இன்று!

கொழும்பு, ஒக். 23

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக தான் நியமித்த இரு குழுக்கள் குறித்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று புதன்கிழமை விசேட அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய

11

## விசாரணைக் குழுவை ரணில் அமைத்தது ஏன்?

### சந்தேகம் எழுப்புகிறார் கர்தினால்

கொழும்பு, ஒக். 23

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரணை செய்வதற்காக ரணில் விக்கிரமசிங்க ஏன் குழுவை அமைத்தார் என்பது சந்தேகத்துக்கு உரிய விடயமாகக் காணப்படுகிறது என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

11

**உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

பல தடவைகள் இந்தக் கதையை ஞாபகப்படுத்தியிருக்கிறேன். இருந்தாலும் இன்றும் அதனை எழுதவேண்டியிருக்கின்றது.

என்னிடம் நண்பன் ஒருவர் வந்து பத்தாயிரம் ரூபாய் கடன் கேட்டார். அவர் வந்து கேட்டபோது என்னிடம் இருக்கவில்லை.

“மச்சான், இப்ப இல்லையடாப்பா, அடுத்த மாதம் முடிந்தால் பார்ப்பம்..“ என்றேன். அவனும் போய்விட்டான்.

அடுத்த மாதம் மறக்காமல் மீண்டும் வந்தான். அப்போதும் என்னிடம் இருக்கவில்லை. போன மாதம் கூறிய அதே பதிலையே இப்போதும் கூறினேன். அவன் போய்விட்டான்.

அடுத்த மாதமும் வந்தான். நானும் இதே பதிலையே கூறினேன். அவனும் எந்தவித கவலையும் - ஏன் கோபம்கூட இல்லாமல் திரும்பிவிட்டான்.

இப்படியே மாதங்கள் நகர்ந்துகொண்டே இருந்தன. அவனும் மாதம் தவறாமல் வந்துகொண்டே இருந்தான். கடைசியாக அவனிடம் நான் கேட்டேன், “என்னிடம் கேட்பதுபோல வேறு யாரிடமும் கேட்கவில்லையா?”.

அவன் சொன்னான்: “நீ தருவாய்தானே என்ற நம்பிக்கையில் நான் வேறு யாரிடமும் கேட்கவில்லை...“.

அப்போது எனக்கு ஒரு விடயம் மாத்திரம் தெளிவாகப் புரிந்தது. அவனுக்கு இந்த பத்தாயிரம்ரூபாய் உண்மையில் தேவையில்லை. என்னிடம் கிடைத்தால் வாங்குவோம் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றான்.

எனக்கு அப்போது புரிந்தது போலத்தான் நமது தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளுக்கும் ஒரு விடயம் எப்போதோ புரிந்துவிட்டது என்று நினைக்கிறேன்.

அதனால்தான் அறுபது வருசமாக தாங்கள் தீர்வைப் பெற்றுத்தருவோம் என்று சொல்லிக்கொண்டிருக்க, தமிழ் மக்களும் அதை நம்பிக்கொண்டு தங்களுக்கே ஒவ்வொரு தேர்தலிலும் வாக்களிக்கிறார்கள் என்றால், தமிழ் மக்களுக்கும் தீர்வு அவசியமாக தேவைப்படவில்லை. அவர்கள் (தாங்கள்) பெற்றுத் தந்தால் பார்ப்போம் என்று அமைதியாக இருக்கிறார்கள் என்று நமது அரசில்வாதிகளும் தங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கதையைத்தான் தீர்வு பற்றி யார் பேசினாலும் சொல்வதுண்டு.

நேற்றைய தினம் இரண்டு முக்கிய அரசியல் தலைவர்களை சந்திக்க முடிந்தது. இருவருமே தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் முக்கியமான தலைவர்கள். தற்போது பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றவர்கள்.

இருவருமே மிகவும் சோர்வடைந்த நிலையில் காணப்பட்டனர். தேர்தல் பிரசாரத்தில் கடுமையாக பணியாற்றுவதால் சோர்வடைந்திருக்கிறார்கள் என்பது தெரிந்தாலும் சம்பிரதாயத்திற்காக “தேர்தல் எப்படி இருக்கின்றது? என்ன சோர்வாக இருக்கிறீர்கள்?” என்று கேட்டேன்.

இருவரையும் ஒரே நேரத்தில் சந்திக்கவில்லை. வெவ்வேறு நேரத்தில்தான் சந்தித்திருந்தேன். ஆனால், இருவருமே ஒரே விடயத்தையே கதைத்துப் பேசி சொல்வதுபோல பதில் சொன்னார்கள்.

“மக்கள் இந்தத் தடவை தேர்தலில் பெரிதாக அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. இந்தத் தடவை வாக்களிப்பு வீதம் மிகவும் குறைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை”.

இதுதான் அவர்கள் இருவரிடமும் இருந்து வந்த பதில்.

“ஒரு விடயம் மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. மக்கள் அரசியல்வாதிகள்மீது, குறிப்பாக தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் மீது கடும் அதிருப்தியில் இருக்கின்றார்கள்” என்று கூறிய ஒரு தலைவர், “ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ் மக்கள் ஒற்றுமையாக தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுவிட்டு, இப்போது அவர்களே தனித்தனித் துண்டுகளாக பிரிந்ததோடு மாத்திரமல்ல கட்சிகளுக்குள்ளும் பல பிரிவுகளாக பிரிந்து நிற்பதால் மக்கள் இப்போது தெளிவடைந்து விட்டார்கள்....”, என்றார்.

இவையெல்லாம் நமக்கும் அண்மைய நாட்களாக உறுத்திக்கொண்டிருந்த விடயம்தான். ஆனால், நான் சந்தித்த மற்றைய தலைவர் சொன்ன தகவல்தான், ஆச்சரியமாக இருந்தது. அதனை நாமும் கவனிக்கவில்லை என்பதும் தெரியவந்தது.

“இப்போது கவனித்தீர்களா... நமது தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் எல்லோரும் தமது துண்டுப்பிரசுரங்களில் அரசியல் தீர்வு பற்றி மட்டுமல்ல, அபிவிருத்தி பற்றியும் பேசுகிறார்கள்.”

தங்களால் பெற்றுக் கொடுக்க முடியாத அரசில் தீர்வு பற்றியே இனியும் பேசிக்கொண்டிருந்தால் மக்கள் ஆகக்குறைந்தது தமது அன்றாட தேவைகள் - வசதிகளுக்காக தேசியக் கட்சிகளின் பின்னால் போய்விடுவார்களோ என்ற அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டதாகவே தெரிகின்றது.

இது மிகவும் ஆபத்தானது என்பதை தமிழ்த் தேசியக் கட்சிகள் என்போர் புரிந்துகொள்ளவேண்டும். அபிவிருத்திக்காக உங்களுக்கு வாக்களிப்பதெனில் - எதற்காக உங்களுக்கு வாக்களிக்க வேண்டும்? என்று மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டால், சாமியிடம் நேரடியாக வரம் கேட்க முடியுமெனில் இடையில் நிற்கும் பூசாரி எதற்கு என்று மக்கள் யோசிக்கத் தொடங்கிவிடுவார்கள்.

இது இனத்தை முற்றாகவே இல்லாமல் செய்துவிடும்.!

- ஊர்க்குருவி

## வடக்கு, கிழக்கு இளைஞர், யுவதிகளின் எதிர்பார்ப்புகள் நிறைவேற வேண்டும்!

### செல்வம் அடைக்கலநாதன்

மன்னார், ஒக். 23

வடக்கு, கிழக்கில் உள்ள இளைஞர், யுவதிகள் மத்தியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஆர்வம் காணப்படுகிறது. அத்துடன், இனப்பிரச்னையும் தீர்க்கப்பட வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர் - இவ்வாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கூறியுள்ளார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அந்த சந்திப்பில் அவர் மேலும் கூறியவை,

இளைஞர்கள் மத்தியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஆர்வம் காணப்படுகிறது. இனப்பிரச்னை விவகாரத்தை தீர்ப்பதற்கான வழி வகைகளையும் நாங்கள் கையாள வேண்டும் என்ற விடயத்தையும் எதிர்பார்க்கின்றனர்.

குறித்த இரு விடயங்களையும் ஒரே திசையில் கொண்டுசெல்ல வேண்டும் என்ற சூழ்நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. திறமையுள்ளவர்கள் தெரிவு செய்யப்படாமல் அரசியல் ரீதியான செயல்பாடுகளில் தங்களுடன் நிற்கின்றவர்களுக்கு சில அமைச்சர்களை கொண்ட கட்சிகள் வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொடுத்துள்ளன.

எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலும் நாங்கள் அபிவிருத்தியோடும், இனப்பிரச்னைக்கான தீர்வுக்கான வழி வகைகள் குறித்தும் நாங்கள் சொல்லியாக வேண்டும் என்ன்ற நிலை இருக்கின்றது. இளைஞர்களின் கோரிக்கைகளை நான் ஏற்றுக் கொள்கிறேன். யாழ்ப்பாணத்தில் ஓர் ஆசனம் குறைக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புகளை தேடிச் சென்றவர்களின் தொகை அதிகரித்துள்ளதான் காரணமாகவே குறித்த ஆசனம் குறைக்கப்பட்டுள்ளது. பொதுவாக பார்க்கின்றபோது இளைஞர்களின் ஆர்வம் உள்நாட்டிலே வேலை வாய்ப்புகள், தொழிற்சாலைகள் அமைத்தல் உள்ளிட்ட பொருளாதார ரீதியாக அவர்களின் சிந்தனைகள் செயல்பட ஆரம்பித்துள்ளன. எனவே இளைஞர், யுவதிகளின் சிந்தனைகளை ஒரு பெறுமதியாக ஏற்று நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

(ஐ)

## தொழில்முனைவோருக்கான பயிற்சி பட்டறை ஆரம்பமானது



யாழ்ப்பாணம், ஒக். 23

தொழில் முனைவோருக்கான பயிற்சி பட்டறை வட்டுக்கோட்டையில் உள்ள மலரும் மூளாய் அபிவிருத்தி அமையத்தில் நேற்று ஆரம்பமானது.

வட மாகாண கல்வி அமைச்சும் தொழில்துறை அமைச்சும் இணைந்து இந்த மூன்றுநாள் செயலமர்வை நடத்துகின்றன.

நேற்றைய ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிமேற்கு பிரதேச செயலர் கவிதா உதயகுமார் கலந்து கொண்டார். அத்துடன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் உபசெயலாளர், தொழில் துறை அமைச்சின் அதிகாரி, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மூளாய் கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எனப் பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

நாளை வரை தொடரும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் 50 பேர் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி மாவட்ட சிறுவர் தின நிகழ்வு!

கிளிநொச்சி, ஒக். 23

கிளிநொச்சி மாவட்ட செயலகமும் கிளிநொச்சி மாவட்ட சிறுவர் சபையும் இணைந்து நடத்திய சிறுவர் தின நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலக திறன் விருத்தி மண்டபத்தில் நடைபெற்றது.

பதில் அரசாங்க அதிபர் (காணி) நளாயினி இன்பராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக, கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தர்மராஜன் விநோதன் பங்கேற்றார்.

சிறப்பு விருந்தினர்களாக, மாவட்ட சிறுவர் மற்றும் பெண்கள் பொலிஸ் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி லக்மாலி குலசேகர, கிளிநொச்சி தெற்கு கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கந்தையா யுவராசா, கிளிநொச்சி வடக்கு கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் பொன்னம்பலம் விஜயநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில் சிறுவர்களின் கலைநிகழ்வுகள், கௌரவிப்பு நிகழ்வுகள் என்பன நடைபெற்றன.

(ஐ)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக். 23

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான சண்முகவிலாச மண்டபத்தில் சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெற்று வருகிறது.

நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் ஆற்றுவார்.

இதைத் தொடர்ந்து சிறப்பு சொற்பொழிவை சைவப்புலவர் செ. த. குமரன் திருக்கைலாச படலம்“ என்னும் தலைப்பில் ஆற்றுவார்.

(ஐ)

## சுவிஸ் தூதரக குழுவினர் நேற்று மன்னார் பயணம்

மன்னார், ஒக். 23

சுவிஸ் தூதரக அரசியல் விவகாரங்களுக்கான முதல் செயலாளர் ஜஸ்டின் கொய்லட் தலைமையிலான குழுவினர் நேற்று செவ்வாய்க்கிழமை மன்னாருக்கு வருகை தந்தனர்.

இதன்போது, அரசியல் மற்றும் சிவில் சமூக தரப்பினர்களை அவர்கள் சந்தித்து கலந்துரையாடினர்.

மன்னார் மாவட்டத்தில் தற்போதைய நிலைமைகள், பொருளாதார - சமூக அடைவுமட்டங்கள் மற்றும் மன்னாரில் நிலவும் பிரதான பிரச்னைகள் தொடர்பாக அவர்கள் பல தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
23.10.2024 புதன்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 06

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## எதிரணியின் தடுமாற்றம்

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்ற மறுநாளே பாராளுமன்றத்தைக் கலைத்து இரு மாதங்களுக்கும் குறைவான காலத்துக்குள் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு உத்தரவிட்ட நேரத்தில் இருந்து தொடங்கிய எதிரணி அரசியல் கட்சிகளின் தடுமாற்றம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

அந்தக் கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலில் தங்களுக்குக் கிடைத்த தோல்வியின் அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்கு முன்னதாக ஜனாதிபதி பாராளுமன்றத் தேர்தலுக்கு முந்திவிட்டார். தேசிய மக்கள் சக்தி உறுதியான அரசாங்கத்தை அமைப்பதற்கு வசதியாக பாராளுமன்றத்தில் பெரிய பெரும்பான்மை பலத்தை தங்களுக்குத் தருமாறு ஜனாதிபதி தற்போதைய தேர்தல் பிரசாரங்களில் மக்களிடம் கேட்கிறார்.

ஜனாதிபதியையும் தேசிய மக்கள் சக்தியையும் பொறுத்தவரை மக்களிடம் முன்வைக்க வேண்டிய கோரிக்கையோ - வேண்டுகோளோ மிகவும் எளிமையானது. ஆனால், எதிரணியை பொறுத்தவரை பாராளுமன்றத் தேர்தல் பிரசாரங்களில் மக்கள் முன்னிலையில் வைப்பதற்கு உருப்படியான வேண்டுகோளோ - வாக்குறுதியோ எதுவும் இல்லை என்பதை கடந்த சில நாட்களில் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

கடந்த வாரம் நாட்டு மக்களுக்கு விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகளையே பாராளுமன்றத்துக்கு மக்கள் தெரிவுசெய்ய வேணடும் என்றும் நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியை புதியவர்களால் கையாளமுடியாது எனவும் கூறினார். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்குத் தன்னுடன் கடந்த இரு வருடங்களாக பாடுபட்டவர்கள் அடுத்த பாராளுமன்றத்தில் பயனுடைய பங்களிப்பை வழங்கக்கூடிய அனுபவத்தையும் ஆற்றலையும் கொண்டிருப்பதால் அவர்களைத் தெரிவுசெய்வதற்கு எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் புதிய ஜனநாயக முன்னணிக்கு வாக்களிக்க வேண்டும் என்ற அழைப்புடன் விக்கிரமசிங்க தனது செய்தியை முடித்துக் கொண்டார்.

இதேவேளை, பிரேமதாஸ நாட்டு மக்களுக்கு எதைக் கூறி வாக்குக் கேட்பது என்று தெரியாமல் தடுமாறுகின்ற பரிதாபத்தை காண்கிறோம். ஜனாதிபதி திஸநாயக்கவுடன் ஒத்துழைத்து செயல்படுவதில் தங்களுக்கு எந்த பிரச்னையும் கிடையாது என்றும் ஜனாதிபதிக்கு உறுதுணையாகச் செயல்பட ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அமைப்பதற்கு வசதியாக மக்கள் தங்களுக்கு வாக்களிக்க வேண்டும் எனவும் பிரேமதாஸ மக்களைக் கேட்கிறார்.

அநுர குமார திஸநாயக்கவை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்த மக்கள் அவர் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கும் செயல்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் வசதியான அரசாங்கத்தை அமைப்பதற்கு அவரின் தேசிய மக்கள் சக்திக்கே ஆதரவை வழங்குவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வாக்களித்த முறையை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடுகளைச் செய்வோர் பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்திக்கு அறுதிப் பெரும்பான்மை பலம் கிடைப்பது சாத்தியமில்லை என்று கூறுகிறார்கள். விக்கிரமசிங்கவும்கூட எந்தக் கட்சிக்கும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை கிடைக்கப் போவதில்லை என்றே தனது அறிக்கையில் கூறினார்.

ஆனால், தேசிய மக்கள் சக்திக்கு ஜனாதிபதித் தேர்தலில் வழங்கிய ஆதரவையும்விட கூடுதலான ஆதரவை மக்கள் பாராளுமன்றத் தேர்தலில் வழங்குவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஜனாதிபதிக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய அரசாங்கத்தை அமைப்பதற்கு அவரின் கட்சிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்கள் கிடைக்கக் கூடியதாக மக்கள் வாக்களிப்பார்களே தவிர, வேறு ஒரு கட்சி அரசாங்கம் அமைப்பதற்கு வாக்களிப்பார்களா?

பிரேமதாஸவுக்கு எங்கிருந்துதான் இந்த யோசனை வந்ததோ?

## சுவிஸ் தூதரக அரசியல் குழுவினர் அடைக்கலநாதனுடன் சந்திப்பு



மன்னார், ஒக். 23

இலங்கைக்கான சுவிஸ் தூதரக அரசியல் விவகாரங்களுக்கான முதல் செயலாளருக்கும், முன்னாள் பாராளுமன்ற உறப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கும் இடையில் நேற்று விசேட சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

சுவிஸ் தூதரக அரசியல் விவகாரங்களுக்கான முதல் செயலாளர் ஜஸ்டின் கொய்லட் தலைமையிலான குழுவினர் நேற்று, மன்னாருக்குச் சென்றனர். இந்த நிலையில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனுடன் சந்திப்பில் ஈடுபட்டனர்.

மன்னாரில் உள்ள கட்சி அலுவலகத்தில் குறித்த சந்திப்பு நடைபெற்றது. இதன் போது தமிழீழ விடுதலை இயக்கத்தின் மன்னார் மாவட்ட பொறுப்பாளர் டானில் வசந்தும் கலந்து கொண்டிருந்தார்.

மன்னார் மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள், தற்போதைய தேர்தல் நிலவரங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்தக் குழுவினர் கேட்டறிந்து கொண்டனர்.

மன்னார் மாவட்ட மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்னைகள் குறித்தும், தீர்க்கப்பட வேண்டிய பிரச்னைகள் குறித்தும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குறித்த குழுவின் கவனத்துக்கு கொண்டு வந்தார். (எ)

## குருதி தட்டுப்பாட்டை நீக்கும் நோக்கில் இரத்த தானம்!

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு விதையனைத்தும் விருட்சமே குழுமம், குறிஞ்சி கிறியேஷன்ஸ் இணைந்து இரத்ததான முகாமை நடத்தினர்.

யாழ். போதனா மருத்துவமனையின் இரத்த வங்கி பிரிவில் நடந்த இந்த இரத்த தான முகாம் நிகழ்வில் விதையனைத்தும் விருட்சமே குழுமம், குறிஞ்சி கிறியேஷன்ஸ் நிறுவன உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வ



குருதிக் கொடையாளர்கள் என 28 பேர் பங்கேற்று குருதி தானம் செய்தனர். (ஐ)

## தபால் மூல வாக்குச்சீட்டுகளை பொதியிடுவோருக்கு செயலமர்வு

### கிளிநொச்சியில் நேற்று நடந்தது

கிளிநொச்சி, ஒக். 23

தபால் வாக்குச்சீட்டுகளை பொதியிடும் அலுவலர்களுக்கான செயலமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றது.


எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில், தபால் மூலம் வாக்களிப்போருக்கான வாக்குச் சீட்டுகளை பொதி செய்யும் அலுவலர்களுக்கான செயலமர்வு நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் நடந்த இந்த செயலமர்வில் உத்தியோகத்தர்களுக்கான கடமைகள், பொறுப்புக்கள் தொடர்பில், கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ. கி. அமல்ராஜ் விளக்கமளித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில், தபால் வாக்குச்சீட்டுகளை விநியோகிப்பதற்காக பழைய மாவட்ட செயலக வளாகத்தில், 7 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தச் செயலமர்வில், தபால் வாக்குச்சீட்டுகளை பொதியிடும் குழுக்களுக்கான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 23 புதன்கிழமை
குரோதி வருடம் - ஐப்பசி 06
நல்ல நேரம் : 09.30 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சப்தமி




**மேடம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வாகனப் பழுதை சரி செய்வீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் சூட்சமங்களை உணர்வீர்கள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தில் பிரச்னைகள் வந்து நீங்கும். கூடுதல் வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**கடகம்**
எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழு பறியில் போய் முடியும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். பணிகளை போராடி முடிப்பீர்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**சிம்மம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப நீங்கள் மாற்றியமைத்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் புது தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும்.

**கன்னி**
மற்றவர்களால் செய்ய முடியாத செயற்கரிய காரியங்களையெல்லாம் முடித்துக் காட்டுவீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**துலாம்**
உற்சாகம் அடைவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல், குழப்பம் விலகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் பணிகளை சிறப்பாக செய்து முடிப்பீர்கள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். தூக்கி எறிந்து பேசாதீர்கள். மற்றவர்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்க வேண்டாம். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

**தனுசு**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சில சூட்சமங்களைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும்.

**மகரம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். அரசால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள்.

**கும்பம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். புதியவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் புது லாபம் கிடைக்கும். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்ளுங்கள். மனதில் நிறைவு பெறும்.

**மீனம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. பணப்பற்றாக் குறையை சமாளிப்பீர்கள். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

# யாழ். போதனாவில் நினைவேந்தல்




யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் அத்துமீறி நுழைந்த இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 68 பேரின் நினைவேந்தல் நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21, 22ஆம் திகதிகளில் யாழ். போதனா மருத்துவமனைக்குள் அத்துமீறி நுழைந்த இந்திய அமைதிப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் மருத்துவமனையில் கடமையில் ஈடுபட்டிருந்த மூன்று மருத்துவர்கள், இரண்டு தாதியர்கள், மேற்பார்வையாளர் உட்பட 21 மருத்துவ சேவையாளர்கள் மற்றும் சிகிச்சை பெற்றுவந்த 47 நோயாளர்கள் என 68 பேர் படுகொலை செய்யப்பட்டனர். (எ)

# அம்மன் ஆலயத்தில் உண்டியல் திருடியவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஒக். 23

தென்மராட்சி வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் இருந்த உண்டியலை திருடிக்கொண்டு தப்பிக்க முயன்றவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவ தினத்தன்று மாலை 5. 30 மணிக்கு காவலாளிகள் ஆலய பாதுகாப்பை பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் மாலை 6 மணியளவில் நபர் ஒருவர் தனக்கு பசிப்பதாகவும் சாப்பாடு இருந்தால் தாருங்கள் என்று காவலாளிகளை கேட்டுள்ளார்.

இதையடுத்து காவலாளிகள் ஆலயத்தில் இருந்த வாழைப்பழத்தை வழங்கியுள்ளனர்.

அதேவேளை குறித்த நபர் மீது சந்தேகம் கொண்ட காவலாளிகள் ஆலயச் சூழலை மிகுந்த அவதானத்துடன் கவனித்து வந்துள்ளனர்.

இந்த நிலையிலேயே இரவு 9 மணியளவில் ஆலய வாசலில் இருந்து நபர் ஒருவர் உண்டியலை திருடிக்கொண்டு கோவிலின் பின் பகுதிக்கு தப்பியோடியதை அவதானித்துள்ளனர்.

இதையடுத்து விரைந்து செயல்பட்ட காவலாளிகள் உடனடியாக குறித்த திருடனை உண்டியலுடன் மடக்கிப்பிடித்து விட்டு ஆலய நிர்வாகத்தினருக்கும் ஊர் இளைஞர்களுக்கும் விடயத்தை தெரியப்படுத்தியிருந்தனர்.

இதையடுத்து குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் குறித்த நபரை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-02)

# சிறுவர் - மகளிர் துஷ்பிரயோக தடுப்பு பணியகம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 23

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் சிறுவர் - மகளிர் துஷ்பிரயோக தடுப்புப் பணியகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையில் நடைபெற்ற இந்த திறப்புவிழா நிகழ்வில் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய கலந்து கொண்டு சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக தடுப்புப் பணியகத்தை திறந்து வைத்தார்.



# 'மாணிக்கவாசகரும் வாழ்த்துப் பத்தும்' சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக். 23

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் -28 நவாலி தெற்கு திருவருள்மிகு சிறீ நாகராஜா இராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணிக்கவாசக சுவாமிகள் குரு வணக்கத்தை தொடர்ந்து சொற்பொழிவை சைவப்புலவர், பிரசங்க பூஷணம் ச. முகுந்தன் "மாணிக்கவாசகரும் வாழ்த்துப்பத்தும்"என்னும் விடயப் பொருளில் சொற்பொழிவும், சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# பனை மரங்களை கடத்தியவர் வட்டுக்கோட்டையில் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 23

சட்டவிரோதமாக பனை மரங்களை கடத்திச் சென்ற ஒருவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது பனை மரங்களும் அவற்றைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்திய வாகனமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

அளவெட்டி பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நபர் ஒருவர், காரைநகரில் இருந்து அளவெட்டி பகுதிக்கு பனை மரங்களை கடத்திச் செல்ல முற்பட்டுள்ளார். இதன்போது அவர் பொன்னாலை பகுதியில் வைத்து வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணையை திசை திருப்பவே புதிய கருத்துகள்

## ரஞ்சன் ராமநாயக்க குற்றச்சாட்டு

**கொழும்பு, ஒக். 23**

**ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணையை திசை திருப்பவே தற்போது புதிய கருத்துக்கள், மொட்டுக் கட்சியை சேர்ந்த நபர்களால் வெளியிடப்படுகிறதோ எனும் சந்தேகம் எழுவதாக ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியின் தலைவரான ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.**

இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தானும் சாட்சி வழங்கத் தயார் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஒவ்வொரு கருத்துக்கள், ஒவ்வொரு நபர்களினால் தொடர்ச்சியாக சொல்லப்பட்டுக் கொண்டுதான் இருகின்றன.

உண்மையில், ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள், இதன் பின்னணியில் இருந்து செயற்பட்டவர்கள் தொடர்பாக எனக்கும் தகவல் கிடைத்து உள்ளதுடன் இது தொடர்பாக நாம் கடந்த சில வருடங்களாகவும் தெரிவித்திருந்தோம்.

எமது கட்சியியைப் பொறுத்தவரை, இந்த தகவல்களை வெளிக்கொண்டுவரும் நபர்கள் மீது குற்றஞ்சாட்டுவதை நாம் முழுமையாக எதிர்க்கிறோம்.

அனைத்து தகவல்களையும் ஒன்றுதிரட்டி, விசாரணை நடத்தி தான் ஒரு தீர்மானத்துக்கு வர வேண்டும், எந்தக் கட்சியினராக இருந்தாலும், அவர் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஒரு விடயத்தை கூறுவாராயின், அதனையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

அத்துடன் ரவி செனவிரத்ன, ஷானி அபேசேகர ஆகிய இருவரும், மிகவும் திறமையான உத்தியோகத்தர்கள் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வரும் முன்னர், ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்படும் என்று உறுதி வழங்கப்பட்டிருந்தது

இந்த நிலையில், இந்த விசாரணையை திசை திருப்பத்தான், தற்போது வேறு விடயங்கள் கூறப்படுகின்றதா என்ற சந்தேகமும் எமக்கு எழுகிறது.

ஏனெனில், தற்போது இந்த விடயங்களை கூறும் தரப்பினர் தொடர்பாகவும் எமக்கு சந்தேகம் உள்ளது. கடந்த காலங்களில் நான் இலஞ்ச-ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு அளித்தபோது, இந்த விசாரணையை நிறுத்துமாறு அன்று நூற்றுக்கணக்கானோரை திரட்டி போராட்டம் நடத்தியதும் இந்த மொட்டுக் கட்சியினர்தான்.

இந்த தரப்பினர்தான் இன்று விசாரணையை வேறு திசைக்கு திருப்ப இவ்வாறான செய்பாடுகளில் ஈடுபடுகின்றார்களோ என்ற சந்தேகம் எழுகிறது.எனவே, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தேர்தல் காலங்களில் மேடைகளில் கூறிய வாக்குறுதிக்கு அமைவாக, ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்தரதாரிகளுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும்-என்றார். (அ)

# மூன்றாம் கட்ட நிதி உதவி பெற ஏற்கனவே ஏற்பாடுகள் தயார்!

## ஷெஹான் சேமசிங்க கூறுகிறார்



கொழும்பு, ஒக். 23

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து மூன்றாம் கட்ட நிதி உதவியைப் பெறுவதற்கான ஏற்பாடுகளை கடந்த அரசாங்கத்தினால் செய்யப்பட்டுள்ளதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவியை பெறுவதற்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டது.

அதன் பிரகாரமே வெற்றிகரமாக முதலாம், இரண்டாம் கட்ட நிதி உதவியை பெற முடிந்தது.

அதேபோல மூன்றாம் கட்ட நிதி உதவியைப் பெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த பின்னர் தான் புதிய ஆட்சியாளர்களுக்கு அரசாங்கத்தை பொறுப்பளித்தோம். இனிவரும் பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டிய கடமை புதிய அரசாங்கத்துக்கு உண்டு.

அத்துடன் அரசாங்கத்துக்கு ஏனைய தரப்பினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்-என்றார்.(அ)

# பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகள்

கொழும்பு, ஒக். 23

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அரச தலைவர்களுக்கான மாநாட்டில் வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பங்கேற்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அரச தலைவர்களுக்கான மாநாட்டில் வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பங்கேற்கும் வகையில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் லண்டனில் அமைந்துள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தின் சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்த அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்கவுள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அரச தலைவர்களுக்கான மாநாடு எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை சமோஆவின் தலைநகர் ஆபியாவில் நடைபெறுகின்றது. "சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய எதிர்காலம்: ஆக்கபூர்வமான பொதுநலவாய அமைப்பு" எனும் தொனிப்பொருள் இம்முறை அரச தலைவர்கள் மாநாடு நடைபெறுகின்றது.

# பல மாற்றங்களுடன் வந்தது கடவுச்சீட்டு!

## அனைத்து பக்கங்களிலும் வரலாற்று புகைப்படங்கள்

கொழும்பு, ஒக். 23

வெளிநாட்டு கடவுச்சீட்டு வழங்கும் நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைத்து, பல மாற்றங்களுடன் நேற்று முன் தினம் முதல் புதிய கடவுச்சீட்டுகளை வழங்க குடிவரவு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

புதிய கடவுச்சீட்டின் நிறம் நீல நிறத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. பழைய கடவுச்சீட்டில் 64 பக்கங்களும், புதிய கடவுச்சீட்டில் 48 பக்கங்களும் உள்ளன. அத்துடன் முந்தைய கடவுச்சீட்டுகளில் என் எண்கள் இருந்த நிலையில் புதிய கடவுச்சீட்டில் பி எண்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் புதிய கடவுச்சீட்டின் அனைத்து பக்கங்களிலும் தலதா மாளிகை, யாழ்ப்பாணம் நல்லூர் கோவில், கொழும்பு தாமரை கோபுரம்,

வரலாற்று சிறப்புமிக்க காலி டச்சு கோட்டை சுவர், பொலன்னறுவை வரலாற்று இடங்கள், சீகிரியா, தேயிலைத் தோட்டம், இறப்பர் வெட்டு உள்ளிட்ட பல புகைப்படங்கள் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு புதிய தலைவராக பாண்டுர திலீப விதாரண

கொழும்பு, ஒக். 23

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு புதிய தலைவர் மற்றும் ஆணைய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன்படி, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் புதிய தலைவராக கலாநிதி பாண்டுர திலீப விதாரண நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆவார்.

ஆணைக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ள ஏனைய உறுப்பினர்கள்:

-டபிள்யூ. ரவி பிரசாத் டி மெல் - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்

-கலாநிதி நாமலி தரங்க சிறிசோம - சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்

-ஏ.ஐ.யு. பெரேரா - உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர். (அ)

# இலங்கை-பாகிஸ்தான் நினைவு முத்திரை வெளியிட உடன்பாடு

கொழும்பு, ஒக். 23

இலங்கை மற்றும் பாகிஸ்தானுக்கும் இடையிலான இராஜதந்திரத் தொடர்புகளை கொண்டாடும் முகமாக நினைவு முத்திரை வெளியிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக, அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல்திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றபோதே அமைச்சரவைப் பேச்சாளர் இதனைக் குறிப்பிட்டார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

2022இல்இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான இராஜதந்திரத் தொடர்புகள் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன.

இரு நாடுகளுக்கிடையிலான நீண்டகால இராஜதந்திரத் தொடர்புகளை எடுத்துக்காட்டும் வகையில் 02 நினைவு முத்திரைகளை வெளியிடுவதற்கு இரு தரப்பினரும் உடன்பாடு தெரிவித்துள்ளனர்.

அதற்காக இலங்கை அஞ்சல் திணைக்களம் மற்றும் பாகிஸ்தான் அஞ்சல் நிறுவனத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூகப்பாதுகாப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# பன்றிகளை வாகனங்களில் ஏற்றிச்செல்லக் கட்டுப்பாடு

கொழும்பு, ஒக். 23

பன்றிகள் இடையே நோய் பரவுவதை தடுக்கும் வகையில், பன்றிகளை வாகனங்களில் ஏற்றிச் செல்லும் போது, கால்நடை சுகாதார சான்றிதழ் அவசியம் என, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஹேமலி கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

நாட்டில், பன்றிகள் இடையே வைரஸ் தொற்று பரவி வரும் நிலையில், இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பண்ணை உரிமையாளர்கள், கால்நடை சுகாதார சான்றிதழை, அந்தந்த கால்நடை வைத்தியரிடம் பெற்றுக்கொள்வது கட்டாயமாகும்.

சரியான சுகாதார சான்றிதழ் இல்லாமல், பன்றிகளை கொண்டு செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

இது, ஏனைய பன்றிகள்வைரஸ் நோய் தாக்கத்தில் இருந்து பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யும்.

என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஹேமலி கொத்தலாவல குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை அழித்தோருக்கு துணை நின்றோரை ஒருபோதும் இணைத்துக்கொள்ளமாட்டோம்!

## கூறுகிறார் இராமலிங்கம் சந்திரசேகரன்

யாழ்ப்பாணம், ஒக். 23

**நாட்டை நாசம் செய்தவர்களுக்குத் துணை போனவர்களை ஒருபோதும் நாம் இணைத்துக் கொள்ள மாட்டோம் என்று தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.**



சாவகச்சேரி நகரில் தேசிய மக்கள் சக்தி அலுவலகம் திறந்து வைக்கப்பட்டபோது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு அவர் உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எடுக்கும் நடவடிக்கைகளை வெற்றி பெறச் செய்ய வேண்டுமானால் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் இருந்தும் தேசிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிடுபவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும்.

யாழ்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்கப் பல இளைஞர்கள் தயாராக உள்ளனர். எம்மோடு அணி திரண்டு வருகின்றனர்.

தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்க் கட்சிகளுக்கு வயிற்றுக் குடைச்சல் ஏற்பட்டு விட்டது.

அவர்கள் மக்களிடம் இனவாதம் பேசி மக்களை சூடேற்றி வாக்கைப் பெறப் பார்க்கின்றனர்.

இனிமேலும் அவர்களுடைய பேச்சைக் கேட்க மக்கள் தயாராக இல்லை.

76 வருடங்களாக தமிழ் கட்சிகளுக்கு வாக்களித்து தமிழர்கள் தலை நிமிர்ந்து வாழ்கின்றனரா?

மக்களுடைய வாழ்க்கையை மாற் றுகின்ற வேலைத் திட்டம் தமிழ்க் கட்சிகளிடம் கிடையாது. இனவாதம் ஒன்றே அவர்களின் ஒரே மூலதனம்.

உலகம் எங்கோ போய்விட்டது. ஆனால் நாம் எங்கோ நிற்கிறோம். தமிழ் கட்சிகள் பிளவடைந்து நிற்கின்ற போதிலும் தமிழர்களின் மானம் காக்க தமிழருக்கு வாக்களியுங்கள் என்கின்றனர். மக்களை தடுமாறச் செய்ப வையாகவே தமிழ்க் கட்சிகள் காணப்படுகின்றன.

அதேசமயம் முன்னாள் அமைச்சர் ஒருவர் மண் கடத்தல் செய்து, கடலை கொள்ளையடித்து யார் ஆட்சிக்கு வந்தாலும் தான் அமைச்சராகிவிடலாம் என்ற கனவில் உள்ளார்.

முன்னை நாள் அமைச்சர் அவர்களே மன்னித்துக் கொள்ளுங்கள். தேசிய மக்கள் சக்தி நாட்டை நாசம் செய்தவர்களுக்கு துணை போன வர்களை ஒருபோதும் இணைத்துக் கொள்ளாது.-என்றார்.

(அ)

# யதார்த்தமான பாதை நோக்கி வழிகாட்ட ஈ. பி. டி. பி. தயார்!

## செயலாளர் நாயகம் டக்ளஸ்

மட்டக்களப்பு, ஒக். 23

தமிழ் மக்களுக்கு ஜதார்த்தமான ஒரு பாதையை நோக்கி வழிகாட்டுவதற்கு ஈ.பி.டி.பி எப்போதும் தயாராக இருக்கின்றது என சுட்டிக்காட்டியுள்ள கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் மக்கள் எமது வழிமுறைகளை ஏற்று அரசியல் பாலத்தை வழங்க அணி திரளவெண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலுக்கான மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்ட செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அம்மாவட்ட மக்களுக்கு இவ்வாறு அழைப்பு விடுத்ததிருந்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழர் அரசியல் புலத்தில் மாற்றம் வேண்டும் என தமிழ் மக்கள் உணர்ந்து விட்டார்கள். அதை நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் சாத்தியமாக்கவும் எண்ணுகின்றார்கள். மக்களின் இந்த அரசியல் தெளிவும் மன மாற்றமும் வரவேற்கத்தக்கது.

இதேநேரம் தமிழ் மக்களை பொறுத்தளவில் புலிகளின் அச்சுறுத்தல் அதிகார பலத்துடன் தமிழரசுக் கட்சியின் நிழலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்டமைப்புக்கும் தமிழ் மக்கள் 2004 இல் 22 ஆசனங்களை கொடுத்தும் அதன்பின்னரான காலங்களில் 16,10 என தமது அபிலாசைகளை பெற்றுத் தருமாறு ஆணை வழங்கியிருந்தனர். ஆனாலும் அதை பெற்றுக்கொண்ட கறித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தத்தமது சுகபோகங்களை அனுபவித்தார்களே தவிர தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுத்திருக்கவில்லை.

இந்நிலையில் தற்போதும் ஒரு அரசியல் மாற்றத்துக்கான சூழ்நிலை வந்துள்ளது. குறிப்பாக அந்த மாற்றம் போலித் தேசிய தரப்பினரிடமிருந்து விடுபட்டு தடுமாறாத கொள்கையையும் சிறந்த தலைமைத்துவத்தையும் கொண்ட ஈ.பி.டி.பியினரது எமது பக்கமாக வீசுவதே தமிழ் மக்களுக்கு நன்மையை கொடுக்கும்-என்றார்.

(அ-05)



# யாரை நிராகரிக்க வேண்டும் என்பதில் தெளிவாய் இருங்கள்

## சிறிதரன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக். 23

நடைபெறவுள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலில், யாருக்கு ஆதரவளிக்கவேண்டும் என்பதற்கப்பால், யாரை நிராகரிக்க வேண்டும் என்பதில் எமது மக்கள் தெளிவாக இருக்கவேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ் தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளருமான சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி - புன்னைநீராவி வட்டாரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு, மக்களோடு கருத்துகளைப் பரிமாறும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாற்றம் என்னும் மாய அலையின் பின்னாலும், இளையவர்கள் - புதியவர்கள் என்ற போர்வையிலும் மக்களைக் குழப்பி, வாக்குகளைச் சிதறடிக்கும் சமநேரத்தில் தேசியக் கட்சிகளோடு ஐக்கியமாகி இனத்தின் இருப்பையே இல்லாமற்செய்யும் பேரினவாத நிகழ்ச்சி நிரல்கள் குறித்து எமது மக்கள் தெளிவாக இருக்கவேண்டும்.

எமது மக்களின் எழுபது ஆண்டுகால அரசியல் அபிலாசைகளை நீர்த்துப்போகச் செய்யும் சக்திகளை, சமரசங்களுக்கு இடமற்று எமது மக்கள் நிராகரிக்கவேண்டும்-என்றார்.

குறித்த கலந்துரையாடலில், புன்னைநீராவி வட்டாரத்தின் செயற்பாட்டாளர்கள், கட்சி ஆதரவாளர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# இலங்கை தமிழ் அரசுக் கட்சி இம்முறை அதிக ஆசனங்களைக் கைப்பற்றும்!

## வேட்பாளர் சரவணபவன் நம்பிக்கை


மட்டக்களப்பு, ஒக். 23

தமிழரசுக்கட்சி இம்முறை அதிக ஆசனங்களைக் கைப்பற்றும் போதுதான் பேரம் பேசும் சக்தியாக பாராளுமன்றத்தில் திகழும், அந்த பேரம் பேசும் சக்தியைக் கொடுப்பதற்கு மக்கள் அனைவரும் எமது சின்னமான வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்கவேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியிப் சார்பில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் மேயரும் மாவட்ட வேட்பாளர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மட்டக்களப்பு மாநகரின் முதல்வராக 5 வருடங்கள் சிறப்பான பணியை வழங்கியிருந்தேன். மட்டக்களப்பு நகரத்துக்கு எனக்கு கிடைத்த அதிகாரம் மாவட்டத்துக்கு விரிவுபடுத்தப்படவேண்டும் என்பதற்காகவே இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகிறேன். இத் தேர்தலில் வெற்றிபெறும் போது, எமது வளங்களான விவசாயம், மீன்பிடி, கால்நடை என ஏனைய பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு எமது ஒத்துழைப்புடன் முன்னேற்றக்கூடிய வகையில் எமது திட்டங்கள் வகைப்படுத்தப்படும்.

அதே போன்று யுத்தத்தினால் கணவனை இழந்தவர்களுக்கான [illegible] பொருளாதார அபிவிருத்திச்



செயல்பாடுகளுக்கும் வழிவகைகள் செய்து கொடுக்கப்படும். தற்சார் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களை வழிமொழிந்து அதன் மூலம் வறுமையை ஒழிப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கலாம். வெள்ளக் காலங்களில் வெள்ளம் ஏற்படாத வகையிலும், வரட்சி காலத்தில் வரட்சி ஏற்படாத வகையிலும் சரியான நீர்முகாமைத்துவத்தினை செய்யவேண்டும்.

தமிழரசுக்கட்சி இம்முறை அதிக ஆசனங்களைக் கைப்பற்ற வேண்டும் அதிக ஆசனங்களைக் கைப்பற்றும் போதுதான் பேரம் பேசும் சக்தியாக பாராளுமன்றத்தில் திகழும், அந்த பேரம் பேசும் சக்தியைக் கொடுப்பதற்கு மக்கள் அனைவரும் எமது சின்னமான வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்கவேண்டும். இலஞ்சம் ஊழல்களில் ஈடுபடாதவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். அவ்வாறானவர்களைத் தெரிவு செய்யும் போது மிக வினைத்திறனான பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யலாம். அப்போது பாராளுமன்றத்தில் வினைத்திறனான செயல்பாடுகள் நாம் மேற்கொள்ளலாம் அதன் மூலம் எமது பிரதேசம் வளர்ச்சியடையும். அந்த வளர்ச்சி மூலமாக பொருளாதாரம் ஸ்திரத்தன்மை அடையும்.

தமிழ்த் தேசியச் சிந்தனையுடன் நாம் அனைவரும் தொடர்ச்சியாகப் பயணிக்க வேண்டும். அச் சிந்தனையில் இருக்கின்ற நாம் அனைவரும் மண்ணையும் மக்களையும் பாதுகாப்பதற்கு நாங்கள் ஒன்றிணைந்து வீட்டுக்கு வாக்களிக்க வேண்டும்.

அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற தமிழ்த் தேசியத்திற்கு எதிரான எந்தவொரு செயற்பாட்டுக்கும் ஆதரவு வழங்கமாட்டோம். ஆனால் நாட்டின் நன்மைக்காக செய்யப்படும் திட்டங்களுக்கு எமது கட்சி ஆதரவு வழங்கும்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்குரோத்தடைந்த இனவாதி கம்மன்பில!

## தேசிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 23

கடந்த காலங்களில் இனவாதத்தையும், மதவாதத்தையும் தூண்டும் வகையில் செயல்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தற்போது அரசியல் ரீதியாக வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், பொதுத் தேர்தலின் போது தனது பிரபலத்தை உயர்த்தும் முயற்சியில் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைகள் தொடர்பில் பேச ஆரம்பித்துள்ளதாகவும் தேசிய மக்கள் சக்தியின் நிர்வாக உறுப்பினரும் கண்டி மாவட்ட தலைவருமான கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கைகள் தன்னிடம் இருந்தால் பொறுப்புள்ள அரசியல்வாதி என்ற ரீதியில் விசாரணைக் குழுக்களிடம் கையளித்திருக்க வேண்டும் என்றும் லால்காந்த தெரிவித்தார்.

கண்டியில் பொதுமக்கள் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே லால்காந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உதய கம்மன்பில மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதி என்பதால் இன்று எவரும் அவரது சவால்களை பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை.

ஒரு காலகட்டம் இனவாதத்தை ஊக்குவிப்பதற்கும், இன்னொரு காலகட்டம் தீவிரவாதத்தை வளர்ப்பதற்கும், மீண்டும் மதப் பிரிவினையை பரப்புவதற்கும் உழைத்த இவர்களின் நடவடிக்கைகள் இப்போது மக்களுக்கு நன்றாகவே தெரியும். இந்த தரப்பினர் போராடினாலும், கூச்சலிடாமல் இருந்தாலும், ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவும் புதிய அரசாங்கமும் ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்குவார்கள் என்பதை அவர்கள் அறிவார்கள். அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மத நிறுவனங்களும் பாதிக்கப்பட்டவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகமும் அந்த நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றன-என்றார். (அ)

# ரணிலின் திட்டங்களையே அநுர முன்னெடுக்கின்றார்!

## ராஜித சேனாரத்ன கூறுகிறார்



கொழும்பு, ஒக். 23

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்களையே தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துச் செல்வதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தேர்தல் மேடைகளில் பல்வேறு உறுதிமொழிகளை வழங்கினார். பொருட்களின் விலைகளைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாகக் கூறினார்.

மக்கள் மீது பாரிய வரி சுமத்தப்பட்டுள்ளதாகவும் ஆட்சிக்கு வந்ததும் அதனைக் குறைப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஆயினும் இவை எதுவும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

உண்மையில் ரணில் விக்கிரமசிங்க நடைமுறைப்படுத்திய திட்டங்களையே தற்போதைய ஜனாதிபதி முன்னெடுத்துச் செல்கிறார்.

அதேபோன்று உள்நாட்டில் கொள்ளையிடப்பட்ட பெருந்தொகை பணம் வெளிநாடுகளில் பதுக்கப்பட்டதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். அவற்றை மீள கொண்டுவருவது மாத்திரமல்லாது திருடர்களை கைதுசெய்வதாகவும் கூறினார்.

இவையெல்லாம் ஆட்சியமைப்பதற்காக கூறப்பட்ட போலியான வாக்குறுதிகளாகும். இவற்றை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்-என்றார். (அ)

# தமிழ் முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர்கள் வெற்றி பெறுவர்!

## அரசாங்கத்திற்கு பெரும்பான்மை கிடைக்காது என்கிறார் இராதாகிருஷ்ணன்



கொழும்பு, ஒக். 23

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில், நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடுகின்ற தமிழ் முற்போக்கு கூட்டணி வேட்பாளர்கள் நிச்சயம் வெற்றி பெறுவார்கள் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பொகவந்தலாவையில் இடம்பெற்ற தமிழ் முற்போக்கு கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரை நிகழ்த்திய அக் கட்சியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் மயில்வாகனம் உதயகுமார், ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு 50 வீதத்துக்கும் குறைவான வாக்குகளே கிடைத்திருந்ததென சுட்டிக்காட்டியதுடன், நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் அரசாங்கம் ஆட்சியமைக்க பெரும்பான்மை பலம் கிடைக்காது என தெரிவித்தார். (அ)

# தவறாக பரப்பப்பட்ட தகவல்களால் எமக்குரிய வாக்குகள் சிதறடிப்பு!

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 2

தவறாக பரப்பப்பட்ட தகவல்களின் பிரதிபலனாக எமக்கான வாக்குகள் சிதறடிக்கப்பட்டுள்ளன என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தவறான தகவல்கள் மற்றும் திரிவுபடுத்தப்பட்ட தகவல்கள் பாரிய நெருக்கடியை தோற்றுவிக்கும் விடயமாக அமையும். உண்மைத் தகவல்களை அறிந்து கொண்டு போலியான தகவல்களை வெளிப்படுத்தும் விடயம் தவறான தகவல்களாக அமையும். இத்தகைய நிலையை நாம் ஜனாதிபதி தேர்தல் காலம் மற்றும் அதனை தொடர்ந்த பின்னரான காலப்பகுதியில் காண முடியுமாக இருந்தது.

அதற்கு சிறந்த உதாரணமாக ராஜபக்ஷர்களால் உகண்டாவுக்கு டொலர் அனுப்பப்பட்டதான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இந்த விடயம் இடம்பெறவில்லை என்றவாறான கருத்தை தற்போது முன்வைக்கின்றனர்.

உண்மைத் தகவல்களை அறிந்து கொண்டு பிழையான தகவல்கள் பரப்பப்பட்டுள்ளன. இவ்வாறு குறிப்பிடப்பட்ட விடயங்களின் காரணமாக எம்முடைய அரசியல் நடவடிக்கைகளை வீழ்ச்சி அடையச் செய்தனர். அவர்களின் கருத்துக்களை நம்பிய மக்கள் எமக்கான வாக்குகளை அளிக்கவில்லை. இத்தகைய பொய்களுக்கு ஏமாற்றமடைய மாட்டோம் என்பதை பொதுத்தேர்தலில் நிரூபிக்குமாறு மக்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம். பொதுஜன பெரமுன பொதுத் தேர்தலில் தீர்க்கமான சக்தியாக மாறும் வகையிலேயே நாம் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்-என்றார். (அ)

# ஈஸ்டர் தாக்குதலை ராஜபக்ஷர்கள் மீது சுமத்த ஒருசில மத தலைவர்கள் முயற்சி!

## குற்றம் சுமத்துகிறது மொட்டு கட்சி

கொழும்பு, ஒக். 23

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பவத்தின் பொறுப்பினை பொதுஜன பெரமுனவின் தலைவர்கள் மீது சுமத்த ஒருசில மதத் தலைவர்களும், அரசியல் கட்சிகளும் முயற்சிக்கின்றன என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் பிரசாரக் கூட்டம் ஒன்றில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதிகாரத்தை கைப்பற்றுவதற்காகவே குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

குண்டுத் தாக்குதல்களின் பொறுப்பை பொதுஜன பெரமுனவின் தலைவர் மீது பொறுப்பாக்குவதற்கு ஒருசில மதத் தலைவர்களும், அரசியல் கட்சிகளும் ஆரம்பத்தில் இருந்து பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2019 ஆம் ஆண்டு குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.



பொதுஜன பெரமுன 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தனது அரசியல் வெற்றியை உறுதிப்படுத்தியது.

குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று முன்வைக்கும் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது.

குண்டுத் தாக்குதல்கள் குறித்து புலனாய்வு பிரிவு முன்னெச்சரிக்கை விடுத்திருந்த சந்தர்ப்பத்தில், அதனை கருத்திற் கொள்ளாது தேசிய பாதுகாப்பை அலட்சியப்படுத்திய பொலிஸ் மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவின் உயர் அதிகாரிகள் தற்போது பாதுகாப்பு தரப்பின் உயர் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் சனல் - 4 தொலைக்காட்சி பொய்யான ஆவணப்படத்தை வெளியிட்டது. சனல் 4 யுத்த காலத்திலும் பொய்யான சித்தரிப்புக்களுடன் ஆவணப்படம் வெளியிட்டது.

ஆகவே இமாம் விசாரணை அறிக்கையை எதிர்பார்த்துள்ளோம். அல்விஸ் அறிக்கையை வெளியிட்ட உதய கம்மன்பிலவுக்கு நாட்டு மக்கள் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

தேசிய மக்கள் சக்தி இந்த குண்டுத் தாக்குதலை அரசியல் பிரசாரமாக்கியே ஆட்சிக்கு வந்தது. ஆகவே நம்பிக்கையிழந்த மக்களுக்கு நியாயத்தை வழங்குமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்கிறோம்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை திட்டமிடல் சேவைக்கு சிங்களவர்கள் 43 பேர் நியமனம்

## தமிழ் மொழி மூல பரீட்சாத்திகளுக்கு அநீதி!

கல்முனை, ஒக். 23

**இலங்கைத் திட்டமிடல் சேவைக்கு புதிதாக 43 சிங்களவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் தமிழ் மொழி மூலபரீட்சாத்திகளுக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**

இலங்கை திட்டமிடல் சேவையின் 3 ஆம் தரத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுள் தமிழ் மொழி மூலம் தோற்றிய தமிழ், முஸ்லிம் பரீட்சாத்திகள் எவரும் நியமனத்துக்காக தெரிவு செய்யப்படாமல் புறக்கணிக்கப்பட்டமை அவர்களது அடிப்படை உரிமையை மீறும் பெரும் அநீதியாகும் என்று மனித உரிமைச் செயல்பாட்டாளரும் ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளருமான ஏ. எல். முகம்மட் முக்தார் தெரிவித்தார்.

இந்த நியமனத்துக்காக தெரிவு செய்யப்பட்டோரின் பெயர்ப் பட்டியலை அரச சேவைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

இதன்படி இம்மாதம் 15 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் திட்டமிடல் சேவைக்காக 43 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் சிங்கள மொழி மூலம் பரீட்சைக்கு தோற்றிய சிங்கள அலுவலர்களாவர்.

தமிழ், சிங்கள மொழி மூலம் போட்டிப் பரீட்சையை நடத்திய பின்னர் நியமனத்துக்காக தமிழ் மொழி மூலத்தைக் கவனத்தில் கொள்ளாமல் சிங்கள மொழியை மட்டும் கவனத்தில் கொள்வதானது விண்ணப்பதாரிகளின் அடிப்படை மொழி உரிமையை மீறும் பெரும் அநீதியாகும்.

இவ்வாறு ஒரு மொழியை மாத்திரம் கவனத்தில் கொள்ளும் போக்கு அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. இதனை தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளும் புத்திஜீவிகளும் சிவில் சமூக அமைப்பினரும் அரச உயர் மட்டத்தின் கவனத்துக்கு கொண்டு சென்று தீர்வு பெற முயற்சிக்க வேண்டும் என மேலும் அவர் வலியுறுத்தினார்.

(எ)

# கைக்குண்டு மீட்பு



சம்மாந்துறை, ஒக். 23

கட்டட வேலைகளுக்காக கொட்டப்பட்ட சல்லிக்குள் இருந்து மீட்கப்பட்ட கைக்குண்டை செயலிழக்கச் செய்ய விசேட அதிரடிப் படையினரால் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீடு ஒன்றில் திங்கட்கிழமை மாலை கட்டட வேலைக்காக கொட்டப்பட்ட கருங்கல் சல்லிக்குள் புதையுண்ட நிலையில் குறித்த கைக்குண்டு மீட்கப்பட்டது.

119 எனும் பொலிஸ் அவசர பிரிவுக்கு வழங்கிய தகவலை தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த சம்மாந்துறை பொலிஸார் கைக்குண்டை பார்வையிட்டதுடன் குண்டு செயலிழக்க செய்யும் விசேட அதிரடிப் படையினர் மற்றும் குற்றவியல் - தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மீட்கப்பட்ட கைக்குண்டை அவ்விடத்தில் இருந்து அகற்றி செயலிழக்க செய்வதற்காக நேற்று சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற கட்டளையை பெற்று மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(எ)




# பல்கலைக்கழகம் செல்லும் 33 மாணவர்கள் கௌரவிப்பு

காரைதீவு, ஒக். 23

காரைதீவிலிருந்து இம்முறை பல்கலைக்கழகம் செல்லும் 33 கல்விச் சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

லண்டனில் வாழும் காரைதீவைச் சேர்ந்த வைத்திய நிபுணர் அருளானந்தம் வரதராசன் தனது பெற்றோர் சார்பில் ஸ்தாபித்த அமைப்பின் ஏற்பாட்டில் காரைதீவு விபுலானந்த கலாசார மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில் முதன்மை விருந்தினராக சம்மாந்துறை ஆதார மருத்துவமனை சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் நடேசன் அகிலன் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினராக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன், காரைதீவு பிரதேச செயலாளர் கோ. அருணன், காரைதீவு பிரதேச சபை செயலாளர் ஏ. சுந்தரகுமார், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. பார்த்தீபன், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

(எ)

### கல்முனை ஆதார மருத்துவமனைக்கு

# 15 மில்லியன் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வழங்கல்

கல்முனை, ஒக். 23

பௌத்த தேரர் தலைமையிலான மருத்துவ சங்கத்தினர் கல்முனை ஆதார மருத்துவமனைக்கு 15 மில்லியன் ரூபாய் பெறுமதியான உபகரணங்களை அன்பளிப்புச் செய்தனர்.

மருத்துவ சேவைகள் சங்கம், அவுஸ்திரேலியாவின் வன்னி ஹோப் லிமிடெட்டுடன் இணைந்து, கல்முனை வடக்கு ஆதார மருத்துவமனைக்கு 15 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள மருத்துவ உபகரணங்களை திங்கட்கிழமை வழங்கியது.

மருத்துவ சேவை சங்கத்தின் பணிப்பாளர் ராஜவல்லே சுபுதி தேரர், அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் ஜேர்மனி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இருந்து உபகரணங்களை தனிப்பட்ட முறையில் பெற்றுக் கொண்டார்.

அவுஸ்திரேலியாவின் வன்னி ஹோப் லிமிடெட் இயக்குநர் ரஞ்சன் சிவஞானசுந்தரம், கப்பல் கட்டணம் மற்றும் தொடர்புடைய வரிகளைச் செலுத்துவதில் முக்கிய பங்கு வகித்தார்.




மருத்துவ சேவை சங்கம், வன்னி ஹோப் அறக்கட்டளையின் பிரதிநிதிகள், மருத்துவர்கள், தாதியர்கள் எனப்பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

(எ)

# பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் செயலமர்வு

ஏறாவூர், ஒக். 23

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒருநாள் செயலமர்வு புத்தசாசன மத விவகார கலாசார அமைச்சின் ஆலோசனைக்கு அமைய, முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸின் வழிகாட்டலின் கீழ் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களில் கடந்த 17, 18, 19 ஆம் திகதிகளில் நடைபெற்றன.



இதில் சுமார் 150 பள்ளிவாசல்களில் இருந்து 450 இற்கும் மேற்பட்ட நம்பிக்கையாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இந்தச் செயலமர்வில் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களின் பொறுப்புகள் மற்றும் கட[illegible]கள், பள்ளிவாசல் எவ்வா[illegible] சமூக மையமாக செயல்படுவது, இலங்கை வக்பு சபை மற்றும் இலங்கை வக்பு நியாய சபை ஆகியன தொடர்பில் நம்பிக்கையாளர்களுக்கு தெளிவூட்டப்ப[illegible]

(எ)

# காத்தான்குடியில் 5,000 லீற்றர் கசிப்புடன் 25 பேர் சிக்கினர்!



காத்தான்குடி, ஒக். 23

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் 5000 லீற்றர் கசிப்புடன் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி, தாழங்குடா, புதுக்குடியிருப்பு, நாவற்குடா, கல்லடி உட்பட பல இடங்களில் பொலிஸார் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது கசிப்பு விற்பனை செய்யும் இடங்கள், கசிப்பு உற்பத்தி நிலையங்கள் என்பன பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டன.

மேலும், கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பெருமளவிலான உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான்மீது தாக்குதல் நடத்த தயாராகி வருகிறது இஸ்ரேல்

## இரகசிய ஆவணங்கள் வெளியானதால் பெரும் பரபரப்பு

ஜெருசலேம், ஒக். 23

**ஈரான் மீது தாக்குதல் நடத்த இஸ்ரேல் தயாராகி வருவது தொடர்பான இரகசிய ஆவணங்கள் வெளியாகியுள்ளன. இது உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

இஸ்ரேல் மீது கடந்த ஏப்ரல் மாதம் 170 ட்ரோன்கள், 150 ஏவுகணைகளை ஏவி ஈரான் தாக்குதல் நடத்தியது. அதேபோன்று, கடந்த முதலாம் திகதி இஸ்ரேல் மீது ஈரான் மீண்டும் தாக்குதல் நடத்தியது. சுமார் 200 ஏவுகணைகளை வீசி இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று இஸ்ரேல் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், ஈரான் ஏவுகணை தாக்குதலுக்கு இஸ்ரேல் பதிலடி கொடுக்கத் திட்டமிட்டுள்ளது. இதுதொடர்பான இரகசிய ஆவணங்கள் வெளியாகி தற்போது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. இதற்காக இராணுவத் தளபாடங்களை இஸ்ரேல் நகர்த்தி வருவதாக ஓர் ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆவணம் 5 கண்கள் எனப்படும் அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் உளவு கூட்டமைப்பிடம் பகிரப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த ஆவணம் ரெலிகிராம் சமூகவலைத்தளத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த இரகசிய ஆவணம் வெளியான விவகாரம் குறித்து விசாரணை நடத்த அமெரிக்க பாதுகாப்புத்துறை உத்தரவிட்டுள்ளது.



# சிரியாவில் வான்வழி தாக்குதல் ஹிஸ்புல்லா முக்கிய தளபதி பலி

டமாஸ்கஸ், ஒக். 23

சிரியாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் முக்கிய தளபதி கொல்லப்பட்டார்.

சிரியா தலைநகர் டமாஸ்கஸில் இஸ்ரேல் நேற்று வான்வழித் தாக்குதல் நடத்தியது. டமாஸ்கஸ் வீதியில் சென்று கொண்டிருந்த கார் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலில் காரில் இருந்த ஹிஸ்புல்லா அமைப்பின் முக்கிய தளபதி உட்பட இருவர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இவ்வாறு கொல்லப்பட்ட நபர் ஈரானில் இருந்து லெபனானுக்கு ஆயுதங்களை கடத்தி வரும் பிரிவின் தளபதியாக செயல்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. (எ)

# வெடித்து சிதறிய ஹெலிகொப்டர்!

## குழந்தை உட்பட 4 பேர் உயிரிழப்பு

வாஷிங்டன், ஒக். 23

தொலைத்தொடர்பு கோபுரத்தில் மோதி ஹெலிகொப்டர் விழுந்து விபத்துக்குள்ளானதில் நால்வர் பலியாகினர்.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் இருந்து ஒரு ஹெலிகொப்டர் புறப்பட்டது. அது ஹூஸ்டன் நகரில் சென்று கொண்டிருந்தபோது அங்கிருந்த தொலைத் தொடர்பு கோபுரம் மீது மோதியது. இதனால் விமானியின் கட்டுப்பாட்டை இழந்து ஹெலிகொப்டர் கீழே விழுந்து நொறுங்கியது.

இந்த விபத்தில் ஹெலிகொப்டரில் பயணம் செய்த ஒரு குழந்தை உட்பட 4 நால்வர் உடல் சிதறி பரிதாபமாக பலியாகினர். தொலைத் தொடர்பு கோபுரத்தில் ஹெலிகொப்டர் மோதியவுடன் தீப்பிடித்து, பயங்கர சத்தத்துடன் கீழே விழும் கோரமான விபத்தின் காட்சி இணையத்தில் பரவி வருகிறது. (எ)

# இஸ்ரேலுக்கு 'தாட்' தடுப்பு ஏவுகணை

## ஈரான் தாக்குதலை எதிர்கொள்ள அமெரிக்கா வழங்கியது

வாஷிங்டன், ஒக். 23

ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தினால், அதை நடுவானில் இடைமறித்து அழிக்க இஸ்ரேலுக்கு 'தாட்'ஏவுகணைகளை அமெரிக்கா வழங்கியுள்ளதாக அந்த நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் லாய்ட் ஆஸ்டின் தெரிவித்தார்.

காஸாவில் ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தி வந்தது. ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவாக லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா போராளிகள் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தினர். இதனால் லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி ஹிஸ்புல்லாவின் முக்கிய தலைவர்களை கொன்றது.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் மீது ஈரான் சுப்பர் சொனிக் ஏவுகணைகளை வீசியது. இவற்றை இஸ்ரேலின் அயர்ன் டோம் தடுப்பு ஏவுகணைகளால் அழிக்க முடியவில்லை. இதனால் அமெரிக்க தயாரிப்பான 'தாட்' வான் தடுப்பு ஏவுகணைகளை இஸ்ரேலுக்கு அமெரிக்கா வழங்கியது.



இது குறித்து கருத்து தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இஸ்ரேலின் பாதுகாப்புக்கு உதவ தாட் வான் தடுப்பு ஏவுகணை கருவிகள் மற்றும் அவற்றை இயக்க 100 அமெரிக்க படையினரும் அனுப்பப்பட்டுள்ளனர். ஈரான் மீது இஸ்ரேல் எப்போது, எப்படி தாக்குதல் நடத்தும் என்ற புரிதல் எனக்கு உள்ளது. இரு தரப்பும் மாறி மாறி தாக்கிக்கொள்வதை நிறுத்துவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது" என்றார்.

இதேவேளை, மத்திய கிழக்கு பகுதியில் போரை விரிவுபடுத்துவதை இஸ்ரேல் தவிர்க்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. ஈரானின் அணு சக்தி மற்றும் எரிசக்தி கட்டமைப்புகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வெளிப்படையாக தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

# சுட்டு வீழ்த்தப்பட்டது ரஷ்ய சரக்கு விமானம்

கார்டூம், ஒக். 23

சூடானில் ரஷ்ய சரக்கு விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சூடானின் வான்பரப்பில் பறந்துகொண்டிருந்த ரஷ்ய சரக்கு விமானத்தை அதிவிரைவு ஆதரவு படையினர் நேற்று ஏவுகணை மூலம் சுட்டு வீழ்த்தினர். ரஷ்ய இராணுவத்துக்குச் சொந்தமான இந்த சரக்கு விமானம் சூடானின் டார்புர் பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த விமானம் ஆயுதங்களை கொண்டு சென்றதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த சம்பவத்தில் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதா? என்ற விவரம் இதுவரை வெளியாகவில்லை. இந்த சம்பவம் குறித்து ரஷ்யா விசாரணை நடத்தி வருகிறது. (எ)

# ரஷ்ய - வடகொரிய கூட்டணியால் உக்ரைனுக்கு புதிய அச்சுறுத்தல்

கீவ், ஒக். 23

ரஷ்யா - வடகொரியா கூட்டணியால் புதிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே,

ரஷ்யாவுக்கு வடகொரியா, இராணுவ அதிகாரிகளை அனுப்பி வரும் தீவிர அச்சுறுத்தல் பற்றி சர்வதேச நட்பு நாடுகள் ஒரு வெளிப்படையான பதிலை தரவேண்டும் என்று அந்த நாட்டின் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்தார்.

இதற்கான சான்றுகளை செயற்கைக்கோள்கள் வழியேயும் மற்றும் ரஷ்யாவில் இருந்து வெளிவரும் வீடியோக்களால் நாம் அனைவரும் காண முடியும் என்றும் ஜெலென்ஸ்கி கூறியுள்ளார். இதனால், போர் நீடிக்குமே தவிர, உலகளவில் ஒருவருக்கும் பலன் ஏற்படாது. போரானது விரைவில் முடிவுக்கு வர வேண்டும்"- என்றார். (எ)




# மணிப்பூரில் மீண்டும் வன்முறை

புதுடில்லி, ஒக். 23

இந்தியாவின் மணிப்பூரில் குக்கி ஆயுதக்குழுவினர் தாக்குதல் நடத்தியதால் அங்கு மீண்டும் வன்முறை வெடித்தது.

வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் கடந்த ஆண்டு மே மாதம் குக்கி, மெய்தி இன மக்களுக்கிடையே கலவரம் வெடித்தது. இதில் சுமார் 200இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும், ஆயிரக்கணக்கானோர் வீடுகளை விட்டு வெளியேறி நிவாரண முகாம்களில் குடியேறினர். மணிப்பூரில் தொடர்ந்து, ட்ரோன்கள், சிறிய விமானங்கள், வெடி மருந்துகள் நிரப்பிய ரொக்கெட் உள்ளிட்டவற்றால், ஆயுதம் தாங்கிய குழுக்கள் தாக்குதல் நடத்தி வந்தன.

இதனிடையே வன்முறை சம்பவங்களை கட்டுப்படுத்தும் வகையில், அங்கு பல இடங்களில் ஊரங்கு பிறப்பிக்கப்பட்டதுடன், இணைய சேவையும் தடை செய்யப்பட்டது. இதனால் சில மாதங்களாக மணிப்பூரில் அமைதியான சூழல் நிலவியது. இந்த சூழலில், சமீப நாட்களாக மணிப்பூரில் மீண்டும் வன்முறை சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றத்துக்கான ஆணையைப் பலப்படுத்துதல்





கலாநிதி ஜெகான் பெரேரா

ஊழலை கையாளுவதாக தேர்தல் பிரசாரங்களின்போது வாக்குறுதியளித்த போதிலும்,முன்னைய ஊழல் அதிகாரிகளை பொறுப்புக்கூற வைப்பதற்கோ அல்லது அரசாங்க நிறுவனங்களில் இடம் பெற்றுக்கொண்டிருக்கும் ஊழலை தடுப்பதற்கோ போதுமானளவு உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்ற ஒரு உணர்வு மக்கள் மத்தியில் காணப்படுகிறது. அதிகாரத்துக்கு தேசிய மக்கள் சக்தியின் துரித எழுச்சி மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புக்களை தோற்றுவித்தது. குறிப்பாக பொருளாதார இடர்பாடுகளை துரிதமாக முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு காணப்படுகிறது.

இந்த எதிர்பார்ப்புகளுக்கும் அரசாங்கத்தின் உண்மையான செயற்பாடுகளுக்கும் இடையிலான இடைவெளி சமூகத்தின் பல்வேறு பிரிவினர் மத்தியிலும் இருந்து அதிருப்தி கிளம்புவதற்கு வழிவகுத்திருக்கிறது. அது ஊடகங்களில் பிரதிபலிக்கிறது. சர்வதேச உடன்படிக்கைகளை மீளாய்வு செய்யப் போவதாக அரசாங்கம் கூறியது. அவற்றில் சில ஊழல் நடைமுறைகளுடன் தொடர்புபட்டவை.

பட்டயக் கணக்காளர் நிறுவனம் அதன் நிகழ்வு ஊழல் முக்கியமான விடயமாக ஆராயப்படும் ஒரு அரங்காக மாறும் என்று எதிர்பார்க்காமல் இருந்திருக்கலாம். அந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதிகள் மூவர் தங்களது ஆட்சிமுறை அனுபவங்கள் பற்றி பேசினார்கள். ஊழலையே முக்கிய தொனிப்பொருளாக எடுத்து கருத்துக்களை வெளியிடுமாறு அவர்களிடம் கேட்கப்பட்டது. அண்மையில் நடந்து முடிந்த தேர்தலிலும் அதுவே முக்கிய தொனிப் பொருளாக அமைந்தது.

ஊழல் பிரச்சினை தாங்கள் போதுமானளவுக்கு கையாளாத ஒரு பிரச்சினை அல்ல என்பதை மூன்று ஜனாதிபதிகளும் அந்த நிகழ்வில் தெளிவுபடுத்தினார்கள். ஊழலைக் கண்டுபிடிப்பதற்கு உறுதியான சான்றுகள் இருக்கவில்லை என்று சிலர் கூறுவதாகத் தோன்றியது. அவர்களில் ஒருவர் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் கூட தொடர்ந்தும் அதுவே நிலைவரமாக இருந்திருக்கும். புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கு மக்கள் ஏன் தீர்மானித்தார்கள் என்றும் தெளிவு படுத்தப்பட்டது.

பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் அந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மூன்று முன்னாள் ஜனாதிபதிகளும் நிகழ்வில் செய்த பங்களிப்புகளுக்காக பெற்ற கரகோஷம் அரசியல் ஒவ்வொரு மட்டத்திலும் ஊழல் எந்தளவுக்கு வேரூன்றியிருக்கிறது என்பதை தெளிவாகக் காட்டியது. உண்மையில், அதிகாரிகள் ஒத்துழைக்காவிட்டால் அரசியல்வாதிகளினால் ஊழல்தனமாக செயல்பட்டிருக்க முடியாது என்று கூறுகின்ற அளவுக்கு முன்னாள் ஜனாதிபதிகளில் ஒருவர் சென்றார்.

பரந்தளவிலான ஊழலின் விளைவாகவே நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது என்பதில் சந்தேகமில்லை. வங்கி கணக்குகளில் பணத்தை வைப்பிலிடுவதன் மூலமாகவோ அல்லது தனியாரின் சட்டைப்பைகளுக்கு பணம் சென்றடைவதன் மூலமாகவோ மாத்திரம் இது இடம்பெறவில்லை. சிலருக்கு வரிச் சலுகைகளையும் நிலக் குத்தகைகளையும் ஏனைய சலுகைகளையும் அரசாங்கங்கள் வழங்கியதன் காரணமாகவும இது இடம்பெற்றது. அந்த சலுகைகளை ஒரு சிலரை வளப்படுத்தி நாட்டை அவறூமைப்படுத்தியது.

### நம்பகத்தன்மையை வலுப்படுத்தல்

நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பாராளுமன்ற தேர்தலுக்கான பிரசாரக்கூட்டம் மாத்தறையில் நடைபெற்றபோது அதில் ஆரம்பவுரை நிகழ்த்திய ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க கடந்த கால ஊழல் வழக்குகளை அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுக்கும் என்று வலியுறுத்திக் கூறினார். ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளின் தற்போதைய மந்தகதிக்கு காரணம் முன்னைய சகல அரசாங்கங்களின் காலத்தில் இடம்பெற்றதைப் போன்று மூடிமறைப்பதற்கான எந்த விருப்பமும் அல்ல என்பதை ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

பிணைமுறிகள் கொள்வனவு தொடர்பானவை ஏற்கெனவே விசாரணைக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த பிணைமுறிகள் கொள்வனவு செய்யப்பட்டகையோடு அவற்றின பெறுமதியை இழந்து நாட்டை வறுமைப்படுத்தியது. கிடப்பில் போடப்பட்ட ஊழல் வழக்குகள் தொடர்பான 400 க்கும் அதிகமான கோப்புகளை மீண்டும் திறக்கப் போவதாகவும் ஜனாதிபதி திசாநாயக்க கூறினார். இந்த அறிவிப்பை தொடர்ந்து எழுந்த கரகோஷம் கொழும்பு நிகழ்வின் கரகோஷத்தையும் விட வேறுபட்ட உணர்வை வெளிப்படுத்தியது.

பாராளுமன்ற தேர்தலுக்கு முகங்கொடுப்பதில் அரசாங்கம் மிகுந்த செயல்திறன் நுட்பத்துடன் நடந்துகொள்கிறது. மிகவும் அண்மையில் கையேற்ற அரசு என்ற கப்பலை கவிழச் செய்துவிடக்கூடிய மிகவும்தீவிரமான எந்த நடவடிக்கையிலும் இறங்காமல் எச்சரிக்கையுடன் அரசாங்கம் நடந்துகொள்கிறது.

அரசாங்கம் மாறினால் நாடு பின்னடைவுக்கு முகங்கொடுக்க வேண்டிவரும் என்றும் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு டொலரின் பெறுமதி அதிகரிப்பதுடன் சர்வதேச நிறுவனங்களுடனான உறவுகளும் கேள்விக்குள்ளாகும் என்று தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளிடமிருந்து ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் வந்த எச்சரிக்கைகளை நன்றாக அறிந்து மனதில் வைத்திருப்பதாக ஜனாதிபதி கூறினார்.

ஆனால் அந்த எச்சரிக்கைகளில் எதுவுமே சாத்தியப்படவில்லை. பதிலாக அரசாங்கம் அதன் சர்வதேச பங்காளிகளுடன் திறமையான செயலாண்மையுடன் விவகாரங்களை கையாளுகிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் முன்னைய அரசாங்கத்தின் கொள்கைகளில் இருந்து மாறுபடாமல் அரசாங்கம் செயல்படுகிறது. தேர்தலில் வெற்றி பெறுவதற்காக அந்த கொள்கைகளை தேசிய மக்கள் சக்தி கடுமையாக விமர்சனம் செய்தது.

பல்கலைக்கழக கல்வியாளரான கலாநிதி ஹரிணி அமரசூரியவை பிரதமராக நியமித்தமை பரந்தளவில் பாராட்டைப் பெற்ற அரசாங்கத்தின் இன்னொரு தீர்மானமாகும். கட்சி அரசியலில் அவரின் எழுச்சிக்கு முன்னதாக, பிரதமர் தேசிய பல்கலைக்கழக முறைமையிலும் சிவில் சமூக அமைப்புகள் மத்தியிலும் தொடர்பைக் கொண்ட மதிப்புக்குரிய ஒரு கல்வியாளராக இருந்து வந்திருக்கிறார். இலங்கையில் ஜனநாயக ஆட்சிமுறையை வலுப்படுத்துவதில் அரசியல் மற்றும் சிவில் செயற்பாட்டாளராக பிரதமர் விளங்கி வந்திருக்கிறார்.

அரசாங்கத்தை பொறுப்புக்கூற வைப்பதையும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட சிவில் சமூக அமைப்புகளுடன் அவர் செயற்பட்டிருக்கிறார். தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறைகளில் குடிமக்களுடனும் ஊடாட்டங்களைச் செய்திருக்கிறார்.

மனித உரிமைகளைப் பொறுத்தவரை குறிப்பாக, பெண்கள், விளிம்புநிலையில் உள்ள சமூகங்கள் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக ஹரிணி அமரசூரிய குரல்கொடுத்து வந்திருக்கிறார். பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னரும் அவரே பிரதமராக இருப்பார் என்று இப்போது அரசாங்கம் செய்திருக்கும் அறிவிப்பு அதன் நம்பகத்தன்மையை மேலும் வலுப்படுத்துகிறது.

### உறுதியான அரசாங்கம்

தனது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றக்கூடியதாக உறுதியான அரசாங்கம் ஒன்றை நிறுவுவதற்கு பாராளுமன்ற தேர்தலில் ஆணை தருமாறு ஜனாதிபதி திசாநாயக்க மாத்தறையில் தனது பிரசார உரையில் மக்களை கேட்டுக்கொண்டார். ஜனாதிபதி தேர்தலில் அவரால் வெறுமனே 42 சதவீதமான வாக்குகளையே பெறக்கூடியதாக இருந்தது. அது அவர் 2019 தேர்தலில் பெற்ற மூன்று சதவீத வாக்குகளையும் விட குறிப்பிடத்தக்க அளவுக்கு கூடுதலான அதிகரிப்பாக இருந்தாலும், முன்னைய ஜனாதிபதிகள் பெற்ற 50 சதவீத வாக்குகள் எல்லைக்கு குறைவானதாகவே இருந்தது.

ஜனாதிபதி தேர்தலில் பெற்ற வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கூடுதலான ஆசனங்களைப் பெறக்கூடிய தனிக்கட்சியாக வரும் என்ற போதிலும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்கப்போவதில்லை. சட்டங்களை நிறைவேற்றுவதற்கு மற்றைய கட்சிகளின் ஆதரவை நாடவேண்டியிருக்கும். (இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரங்களை வலுப்படுத்துதல் போன்ற) ஊழல் எதிர்ப்புச் சட்டங்களில் மாற்றங்களைச் செய்யவேண்டிய தேவை இருக்கிறது. ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படக்கூடியவர்களை உள்ளடக்கிய எதிச்க் கட்சிகள் அவற்றின் ஆதரவை வழக்குவதற்கு விரும்பாமல் இருக்கக்கூடும்.

தேசிய மக்கள் சக்தியின் முதல் ஒரு மாதகால அரசாங்கம் சனத்தொகையில் பெரும்பாலானவர்களை பொறுத்தவரை ஒரு நேர்மறையான அனுபவமாக இருந்திருக்கிறது. தேசிய மக்கள் சக்தியின் மார்க்சிய கடந்த காலம் காரணமாக அதன் வெற்றியை பற்றி ஐயப்பாடுகளைக் கொண்டிருப்பவர்களுக்கு கூட ஜனாதிபதி தேர்தலுக்கு பிறகு இடம் பெற்ற வன்முறையற்ற - ஜனநாயக அதிகார மாற்றம் நம்பிக்கையை கொடுத்திருக்கிறது. ஆட்சிமுறை நடைமுறைகளில் மாற்றத்தை எதிர்பார்க்கும் பெரும்பாலான மக்கள் அந்த மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய சக்தியாக தேசிய மக்கள் சக்தியை நோக்குகிறார்கள்.

இதனால் ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்களிக்காதவர்கள் பாராளுமன்ற தேர்தலில் அதற்கு வாக்களிக்கும் சூழ்நிலை ஏற்படலாம். எனவே ஜனாதிபதி தேர்தலில் பெற்ற 42 சதவீதமான வாக்குகளையும் விட கணிசமான அளவுக்கு கூடுதலான வாக்குகளை தேசிய மக்கள் சக்தி பெறக்கூடிய சாத்தியம் இருக்கிறது. எதிர்க்கட்சிகளுக்குள் நிலவும் உட்பூசல்கள் மற்றும் அவற்றின் அணிகளுக்குள் இருக்கும் ஊழல் பிரச்னையை கையாளத் தவறியமை காரணமாக அந்த கட்சிகள் மீதான மக்களின் கவனம் குறைந்திருக்கிறது. அதனால் தேசிய மக்கள் சக்திக்கு பாராளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மை கிடைப்பதற்கான சாத்தியப்பாட்டுக்கு வழிபிறக்கலாம்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை செயற்படுகின்ற பாங்கு காரணமாக, தேசிய மக்கள் சக்தி அரசியலமைப்பை மாற்றக்கூடியதாக பாராளுமன்றத்தில் அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைப்பது சாத்தியமில்லாமல் போகலாம். எவ்வாறிருந்தாலும், 1972 ஆம் ஆண்டிலும் 1978 ஆம் ஆண்டிலும் இடம்பெற்றதைப் போன்று கருத்தொருமிப்பு இல்லாத அரசியலமைப்புக்களைக் கொண்டுவரக்கூடியதாக ஒரு கட்சி அதன் சொந்தத்தில் அரசியலமைப்பு சீர்திருத்தங்களை முன்னெடுப்பது விரும்பத்தக்க ஒரு நிகழ்வாய்ப்பு அல்ல.

இந்த நோக்கத்துக்காக தேசிய மக்கள் சக்தி இன,மத சிறுபான்மைக் கட்சிகளின் குறிப்பாக வடக்கு, கிழக்கைச் சேர்ந்த கட்சிகளின் ஆதரவைப் பெறுவதில் நாட்டம் காட்டினால்அது விரும்பத்தக்கதாக இருக்கும். தேசிய நலனுக்காக அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதற்கு தயாராயிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச ஏற்கெனவே அறிவித்திருக்கிறார். சகல சமூகங்களையும் அரவணைக்கும் வகையிலான அடிப்படைச் சீர்திருத்தினால் விரும்பத்தக்க விளைவுகளைக் கொண்டுவரமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடாவில்...

இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் குறித்து இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை.

சம்பவம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் வந்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முயற்சித்தபோதும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் கனடாவின் ஒன்றாறியோ பொலிஸார் கொலை தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர். (அ)

## விசாரணை...

ஓய்வுபெற்ற நீதிபதி ஏஎன்ஜே அல்விஸ் தலைமையில் குழு ஒன்றை அமைக்க முன்னாள் ஜனாதிபதி ரணில் தீர்மானித்தமைக்கு என்ன காரணம்?
- அதன் நோக்கம் என்ன?

ரணில் விக்கிரமசிங்க ஏன் இந்த குழுவை அமைத்தார் என்பது சந்தேகத்துக்கு உரிய விடயமாக காணப்படுகிறது. ஷானி அபயசேகரவையும் ரவி செனவிரத்னவையும் அரசியல் ரீதியில் பழிவாங்குவதற்காகவே இந்த குழு அமைக்கப்பட்டதா என்பது குறித்து சந்தேகம் கொண்டுள்ளோம்", - என்றும் கூறினார். (ஐ)

## கம்மன்பிலவின்...

ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் பக்கசார்பற்ற விசாரணை நடத்தப்பட்டு பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உதய கம்மன்பில வேறு சிலரின் தேவைக்காக அறிக்கையொன்றை காண்பித்து தகவல்களை வெளியிட்டுள்ளார்.

தேர்தல் காலம் என்பதால் அவர் அவ்வாறு நடந்துகொள்கிறார். ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மீது நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வருவதாக அவர் கூறுகிறார். முதலில் அவர் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகட்டும். அவர் சிறு பிள்ளைத்தனமாக நடந்துகொள்கிறார்.

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் மேல் நீதிமன்ற நீதிபதி அல்விஸ் தலைமையிலான குழுவின் அறிக்கையை அரசாங்கம் என்ற வகையில் நாம் ஏற்றுக் கொள்ளமாட்டோம். அதனையே உதய கம்மன்பில சமர்ப்பித்துள்ளார்.

அந்த அறிக்கை உத்தியோகபூர்வ மற்றது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் தேவைக்காகவே நீதிபதி அல்விஸ் தலைமையில் குழு உருவாக்கப்பட்டது. அந்த அறிக்கையின் பிரதிகள் ஜனாதிபதி செயலகம், சட்ட மாஅதிபர் திணைக்களம், பேராயர் இல்லம் உள்ளிட்டவற்றுக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறுதின தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் நாம் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம். அது பக்கசார்பின்றி மேற்கொள்ளப்படுகிறது.

அதில் இரு விடயங்களை நாம் பார்க்க வேண்டும். தாக்குதல் நடத்தியோர் பற்றியும் தாக்குதலை தடுக்கத் தவறியோர் பற்றியும் விசாரணை நடத்தப்படுகிறது. அதன் பிரகாரம் குற்றவாளிகளாக அறியப்படுவோர் மீது பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ)

## யாழ்ப்பாணம்...

மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர். இதனை விசாரித்த மேன் முறையீட்டு நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதி வான் நீதிமன்றுக்கு உத் தரவிட்டது.

இதையடுத்து 2012 செப்ரெம்பர் 19ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன் றில் வழக்கு விசாரணை ஆரம்பமானது. எனினும், இந்த வழக்கில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டிருந்த அப்போதைய பாதுகாப்பு செயலரான கோட்டாபய ராஜபக்ஷ யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகி சாட்சியமளிப்பதைத் தவிர்த்து வந்திருந்தார்.

இதனிடையே, தாக்கல் செய்யப்பட்ட மற்றொரு வழக்கில் கோட்டாபய ராஜபக்ஷவை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்துக்கு சாட்சியமளிக்க அழைக்க முடியாது என்ற உத்தரவை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்திருந்தது.

இந்த உத்தரவை சவாலுக்கு உட்படுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த மனு நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தது. இதன்போதே, கோட்டாபய ராஜபக்ஷவின் நிலைப்பாட்டை அவரின் சட்டத்தரணி உயர்நீதிமன்றத்துக்கு தெரிவித்திருந்தார். (ஐ)

## மாகாண...

துறைகளில் உள்ள வெற்றிடங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதோடு அதற்குச் சாதகமான தீர்வுகளை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

தற்போதைய நிலைமாறு காலத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை இலகுபடுத்துவதற்கு மாகாண சபைகளினால் வழங்கக் கூடிய உச்ச சேவையை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற மாகாண ஆளுநர்களுடனான கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்களின் வாழ்க்கையை இலகுவாக்கும் வகையில் மாகாண சபைகளினால் சாத்தியமான அனைத்து பொருளாதார மற்றும் சமூக தலையீடுகளையும் மேற்கொள்ளுமாறு மாகாண ஆளுநர்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

புதிய அரசியல் கலாசாரமொன்றை ஆரம்பிப்பதற்காகக் கிடைத்துள்ள மக்கள் ஆணையை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, மக்களின் எதிர்பார்ப்பை பாதிக்காத வகையில் செயற்படுமாறும் வலியுறுத்தினார்.

அரசாங்க சொத்துக்களை பயன்படுத்துவதில் முன்னைய மோசமான முன்னுதாரணங்களை ஒதுக்கி தரமான அரச சேவைக்கு தம்மை அர்ப்பணிக்குமாறு ஆளுநர்களுக்கு ஜனாதிபதி அநுர குமார தெரிவித்தார்.

இதன்போது வடக்கு-கிழக்கு காணிகள் தொடர்பாகவும் மாகாண சபை நிதிப் பயன்பாடு தொடர்பிலும் ஆழமாக ஆராயப்பட்டது.

சுந்தளாய் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட காணி தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன, கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர, ஊவா மாகாண ஆளுநர் கபில ஜயசேகர, தென் மாகாண ஆளுநர் பந்துல ஹரிஸ்சந்திர, மத்திய மாகாண ஆளுநர் சரத் பண்டார சமரசிங்க அபயகோன் மற்றும் வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த குமார விமலசிறி ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (ஐ)

## சிறந்த...

இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மகிந்த சமரசிங்கவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளரும் இலங்கை உள்ளிட்ட ஆசியா தொடர்பான கொள்கைத் தீர்மானங்களின் தலைவருமான கென்ஜி ஒகமுரா தலைமையிலான சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் சர்வதேச நாணய நிதியம் சார்பில் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளனர்.

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் அஜித் அபேசேகர உள்ளிட்டோரும் இதில் கலந்துகொண்டனர் என தெரிவிக்கப்படுகிறது. (அ)

## உயிர்த்த...

கம்மன்பில நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையை தொடர்ந்தே ரணில் விக்கிரம சிங்க விசேட அறிக்கையை வெளியிடவுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்த இரு குழுக்களும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவிசெனவிரட்ண, சிஐடியின் முன்னாள் இயக்குநர் ஷானி அபயசேகர ஆகியோருக்கு எதிராக குற்றச்சாட்டுகளை சுமத்தியிருந்தன என்று உதய கம்மன்பில கூறியிருந்தார்.

இந்த குற்றச்சாட்டுகளை அரசாங்கமும் கத்தோலிக்க திருச்சபையும் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரஷ்ய...

இராஜதந்திர ரீதியில் இந்த விடயத்தை அணுகுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், முப்படைகளை சேர்ந்த முன்னாள் படையினர் தொழில் வாய்ப்புக்காக ரஷ்ய இராணுவத்தில் இணைந்துள்ளனர். இவ்வாறு இணைந்தவர்களில் பெரும்பாலானோர் காணாமல் போயுள்ளனர். இது தொடர்பில் இலங்கையிலுள்ள ரஷ்ய தூதுவரிடம் கலந்துரையாடி இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய இவ்வாறானவர்களை மீண்டும் ரஷ்ய இராணுவத்தில் இணைத்துக் கொள்ளாமல் இருப்பதற்கும் தற்போது காணாமல் போயுள்ளவர்கள் தொடர்பில் தகவல்களை ஆராய்ந்து வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. யுத்தத்தின்போது காணாமல் போனவர்களை கண்டு பிடிப்பது இலகுவான விடயமல்ல. அங்கு தீவிர யுத்தம் நடைபெற்று வருகிறது.

எவ்வாறிருப்பினும், வெளிநாட்டலுவல்கள் அமைச்சு என்ற ரீதியில் நாம் இந்த விவகாரத்தில் அவதானம் செலுத்தி வருகின்றோம். ஆனால், முழுமையான தகவல்களை குறுகிய காலத்துக்குள் வழங்க முடியும் என்று எம்மால் கூறமுடியாது. எனவே, முன்னர் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகளை அவ்வாறே முன்னெடுத்து செல்கின்றோம். அதற்கமைய இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர தொடர்புகள் ஊடாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்ட ரீதியாக ரஷ்ய இராணுவத்தில் இணைந்திருந்தால் அவர்களை இலகுவாக நாட்டுக்கு அழைத்து வர முடியும். ஆனால், இவர்கள் சட்டத்துக்கு முரணாக உத்தியோகபூர்வமற்ற இராணுவத்தில் இணைந்திருப்பதால் மீட்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது இலகுவானதல்ல - என்றார். (ஐ)

## இருவழக்குகளில்...

மாணவர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டங்களை கலைத்தபோது பொலிஸார் தாக்குதல் நடத்தியமை தொடர்பான மனுவிலேயே முன்னாள் ஜனாதிபதி ரணிலை பிரதிவாதியாக சேர்ப்பதற்கு உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த மனுக்கள் நேற்று உயர்நீதிமன்றில் ஆராயப்பட்டவேளை சட்டத்தரணிகள் விடுத்த வேண்டுகோள்களை ஆராய்ந்த உயர்நீதிமன்றம் ரணில் விக்கிரமசிங்கவை பிரதிவாதியாக குறிப்பிடுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. (ஐ)

## அரிசி...

ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அரிசி வியாபாரிகள் மற்றும் விவசாய திணைக்கள அதிகாரிகளுடன் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் நுகர்வுப் பொருட்களின் தற்போதைய விலை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதுடன், மக்களின் பிரதான உணவாக பயன்படுத்தப்படும் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

நிர்ணய விலை அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் பின்னர் அரிசியின் விலையை மாற்றுவது நியாயமல்ல எனவும் அரிசி வியாபாரிகளிடம் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

விவசாயிகளிடம் இருந்து அரிசியை நியாயமான விலையில் பெற்றுக் கொள்வதற்கும், நுகர்வோருக்கு நியாயமான விலையில் அரிசியை வழங்குவதற்கும் முறையான பொறிமுறையொன்று அவசியம் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அரிசியின் விலை செயற்கையாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நீண்டகாலமாக உத்தரவாத விலைகளை அமுல்படுத்தாததன் காரணமாகவே இந்த விலை ஸ்திரமின்மை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அரிசியை சேகரித்து வைக்கும் மூன்றாம் தரப்பினர் குறித்தும் இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டதுடன், அவர்களை பதிவு செய்வது தொடர்பில் கவனம் செலுத்துமாறு விவசாய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

இக்கலந்துரையாடலில், சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு ஏற்படும் நிதி நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காக உள்ளீட்டு விலைகளைக் குறைப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. (அ-05)

## தமிழ்மக்களின்...

த. சித்தார்த்தன்.

நேற்றைய தினம் கிளிநொச்சி - பரந்தனில் கூட்டணியினர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டனர். இதன்போது, ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு,

"ஐந்து கட்சிகள் சேர்ந்து போட்டியிடுகிறோம். தமிழ்த் தேசிய பரப்பில் பலமான கட்சியாக எமக்கு ஆதரவு தருகின்றவேளை முன்புபோல் இல்லாது ஒற்றுமையாக செயல்பட்டு தமிழ் மக்களின் பிரச்னையை தீர்ப் போம்.

தற்போதைய அரசாங்கம் தமிழ்த் தேசிய இனப்பிரச்னை தொடர்பில் எவ்வாறு செயல்படும் என்பது தெரியாது. ஜனாதிபதி அநுரகுமாரவுடன் பேச்சு நடத்தி நியாயமான தீர்வைப் பெறுவதற்கான முயற்சிகளை முன்னெடுப்போம் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## போரை முடித்து வைத்த மகிந்தவை காக்கவேண்டியது அரசின் பொறுப்பு

### கூறுகின்றார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, ஒக். 23

நாட்டை பிளவுபடுத்துவதற்கு புலிப் பயங்கரவாதிகள், டயஸ்போராக்களாக முயற்சித்துவரும் சூழ்நிலையில், போரை முடிவுக்கு கொண்டுவந்த மஹிந்த ராஜபக்ஷவை பாதுகாக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும் - என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

புலிப் பயங்கரவாதிகள், டயஸ்போராக்களாக இந் நாட்டை பிளவுபடுத்துவதற்கும், தமது இலக்கை அடைவதற்கும் தொடர்ந்து முயற்சித்துவருகின்றனர். அதே போல உலகளவில் அடிப்படைவாதம், பிரிவினைவாதம் மற்றும் தீவிரவாதம் தலைதூக்கியுள்ளன.

இவற்றுக்கு எதிராக போராடி, போரை முடித்த தலைவருக்கு பாதுகாப்பு வழங்கவேண்டியது அரசின் கடப்பாடாகும்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துகொடுக்கவேண்டியதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அதேவேளை, எமது அரசியல் முகாம்தான் இந் நாட்டை அபிவிருத்தி செய்தது. எனவே, நாட்டை வீழ்துவதற்குரிய துரோத அரசியலில் ஈடுபடுவதற்கு நாம் தயாரில்லை.

உலகில் எந்நாட்டுக்கு வேண்டுமானாலும் செல்லுங்கள். ராஜபக்சக்கள் சட்டவிரோதமாக எதையேனும் சேமித்து வைத்திருந்தால் அவற்றை கொண்டுவாருங்கள். அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும்-என்றார். (அ)

## 42,000 கடவுச்சீட்டுக்கள் இன்று நாட்டுக்கு வரும்!

கொழும்பு, ஒக். 23

நாட்டில் இந்த வாரத்துக்கு தேவையான 50,000 கடவுச்சீட்டுக்கள் இருப்பில் இருப்பதாக அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

7500 கடவுச்சீட்டுக்கள் கடந்த வாரம் நாட்டை வந்தடைந்ததுடன் மேலும் 42,000 கடவுச்சீட்டுக்கள் இன்று நாட்டை வந்தடையும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நவம்பர் மாதத்தின் இடைப்பகுதியில் மேலும் ஒரு இலட்சம் கடவுச்சீட்டுக்கள் நாட்டுக்கு கொண்டுவரப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, கடவுச்சீட்டு விடயத்தில் மக்கள் அச்சப்பட வேண்டிய அவசியம் இல்லை. 7,50,000 கடவுச்சீட்டுக்கள் பகுதியளவில் நாட்டை வந்தடையும் என்று அவர் மேலும் கூறினார்.

இந்த வாரத்துடன் கடவுச்சீட்டு பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். கடவுச்சீட்டுக்கான வரிசையும் இந்த வாரத்துடன் முடிவுக்கு கொண்டுவரப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## நாளுக்கு நாள் அதிகரிக்கும் டெங்கு 21 நாட்களில் அதிகளவானோர் பதிவு

கொழும்பு, ஒக். 23

நாட்டின் பல பகுதிகளில் கடந்த சில நாட்களாக பெய்த பலத்த மழை காரணமாக விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நாளை முதல் 26 ஆம் திகதி வரை விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், ஒக்ரோபர் மாதம் ஆரம்பித்து தற்போது வரை 1,983 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இவ்வருடம் ஆரம்பித்து காலப்பகுதி வரை 41,394 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, மேல் மாகாணத்தில் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தற்போது 17,587 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 20 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன. (அ)

# ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள் நீடித்துவரும் குழப்ப நிலைமை!

### சஜித்தை முந்துவாரா ஹர்ஷ டி சில்வா

கொழும்பு, ஒக். 23

**சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது . கூட்டணியில் இருந்து சம்பிக்க ரணவக்க வெளியேறியுள்ள நிலையில் மேலும் சில உறுப்பினர்கள் அதிருப்தி நிலையில் உள்ளனர். கூட்டணியில் மட்டும் அல்ல ஐக்கிய மக்கள் சக்திக்குள்ளும் உள்ளக மோதல்கள் உக்கிரம டைந்துள்ளது.**

கம்பஹா மாவட்டத்தில் வேட்பு மனு தாக்கல் செய்த அஜித் மானப்பெரும தேர்தலில் இருந்து விலகியுள்ளார். ஜனாதிபதி தேர்தலின் போது சஜித்துக்காக பிரசாரம் செய்த நடிகை தமிதா, தற்போது சஜித் தரப்பை விளாசித்தள்ளி வருகின்றார்.நேற்று முன் தினம் கட்சியும் தாவினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் ஹிருணிக்கா பதவி விலக முடிவெடுத்திருந்தாலும் அவரது பதவி விலகல் கடிதத்தை சஜித் ஏற்கவில்லை. ஹிருணிக்காவை தற்காலிகமாக சமரசப்படுத்தும் முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை சஜித்தின் தலைமைத்துவத்துக்கு எதிராக கட்சிக்குள் சில உறுப்பினர்கள் கருத்துகளை முன்வைத்துவருகின்றனர். கட்சியின் தலைமைப்பதவியை கலாநிதி ஹர்ஷ டி சில்வாவுக்கு வழங்குமாறும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியில் சஜித் பிரேமதாஸ, ஹர்ஷ டி சில்வா ஆகிய இருவரும் இம்முறையும் கொழும்பு மாவட்டத்திலேயே போட்டியிடுகின்றனர். கடந்த முறை எதிரணி விருப்பு வாக்கு பட்டியலில் சஜித் முதலிடம் பிடித்திருந்தாலும் இம்முறை ஹர்ஷ டி சில்வாவுக்கே வாய்ப்பு அதிகம் எனக் கூறப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்க போட்டியிடாததால் அவரை விரும்பக்கூடிய தரப்புகள், ஹர்ஷ டி சில்வாவையே ஆதரிக்கக்கூடும். விருப்பு வாக்கு பட்டியலில் சஜித் பின்தள்ளப்பட்டு, ஹர்ஷ முதலிடம் பிடித்தால் அது சஜித்தின் தலைமைப்பதவிக்கும் ஆபத்தாக அமையவுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# புலமைப்பரிசில் பரீட்சை குறித்து அடிப்படை உரிமை மனு தாக்கல்!

கொழும்பு, ஒக். 23

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெளியானதாகக் கூறப்படும் மூன்று கேள்விகளுக்கு முழு மதிப்பெண் வழங்க எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்து செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் இருந்து குறித்த பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் இந்த மனுவை சமர்ப்பித்துள்ளனர்.

அதன்படி, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், கல்வி அமைச்சரான பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நிறைவடைந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் முதலாம் பகுதியில் மூன்று கேள்விகள் முன்னதாகவே வெளியிடப்பட்டதாக கூறப்படும் சம்பவம் காரணமாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை முன்னதாக வெளியிடப்பட்டதாக கூறப்படும் 3 வினாக்களுக்கு பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் முழு மதிப்பெண் வழங்க அதிகாரிகள் தீர்மானம் எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# “குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அரசியலில் இருந்து விலகுவேன்”!

கொழும்பு, ஒக். 23

கண்டியில் அண்மையில் கைப்பற்றப்பட்ட இரண்டு சொகுசு வாகனங்களுடன் எனக்கு தொடர்பு இருப்பது நிரூபிக்கப்பட்டால் அரசியலில் இருந்து விலகுவேன் என முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குறித்த வாகனங்களுக்கும் தனக்கும் தொடர்பில்லை. ஊழல் மற்றும் மோசடியில் ஈடுபடுவதற்காக நான் அரசியலில் ஈடுபடவில்லை. இதுபோன்ற சம்பவங்கள் நடந்தால், உண்மையைக் கண்டறிந்த பிறகே பேச வேண்டும் என்று கூற விரும்புகிறேன்.

எனக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் பாராளுமன்றத் தேர்தலில் வேட்புமனுவில் இருந்து விலகுவேன் - என்றார்.

கண்டி, அனிவத்தையில் உள்ள குடியிருப்பு ஒன்றின் கராஜில் பி.எம்.டபிள்யூ மற்றும் சொகுசு எஸ்.யு.வி வாகனங்களை கண்டி குற்றத்தடுப்புப் பிரிவினர் அண்மையில் கண்டுபிடித்தனர்.

இந்த வாகனம் முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவின் உறவினர் ஒருவருக்குச் சொந்தமானது எனவும் அவர் துறைமுக அமைச்சராக இருந்த காலத்தில் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இரு பஸ்கள் மோதி விபத்து!

கொழும்பு, ஒக். 23

அவிசாவளை-இரத்தினபுரி வீதியில் இரண்டு பயணிகள் பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

அவிசாவளை, பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திவுரும்பிட்டிய பகுதியில் நேற்று பிற்பகல் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் இரு பஸ்களின் சாரதிகள் உட்பட 5 பேர் காயமடைந்துள்ளதாக அவிசாவளை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் சிகிச்சைக்காக அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அவிசாவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## வாக்குமூலம் வழங்க ஜோன்ஸ்டன் தயார்!

கொழும்பு, ஒக். 23

அண்மையில் சொகுசுக் கார் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகி வாக்குமூலம் வழங்க தயார் என முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அறித்துள்ளார் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தனது சட்டத்தரணி ஊடாக நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் இதனை அறிவித்தார்.

அத்துடன் தம்மை கைது செய்வதை தடுக்க உத்தரவிடுமாறு கோரி ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தாக்கல் செய்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அங்கு, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் குழுக் கொள்ளைப் புலனாய்வுப் பிரிவில் இன்று ஆஜராகி சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்கத் தயார் என ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தனது சட்டத்தரணி ஊடாக நீதிமன்றுக்கு அறிவித்தார்.

அதையடுத்து, மனுவை வரும் 25ஆம் திகதி விசாரிக்க உத்தரவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.